விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 26 | திங்கட்கிழமை (10.01.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 22

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர
தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

## வடக்கிற்குவர கொபிஅனான் விரும்பியும் அரசு அனுமதிக்கவில்லை: தமிழ்ச்செல்வன்

### சமாதான முயற்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபிஅனான் வடக்கிற்கு விஜயம்மேற்கொள்ளாமை தமக்கும், தமிழ் மக்களிற்கும் ஏமாற்றமளித்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கொபிஅனானின் இலங்கை விஜயமானது மனிதாபிமான நோக்கத்துடனான விஜயமாகும். இருந்தும் இலங்கையில் மோசமாகப்பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அவர்விஜயம் மேற்கொள்ளாமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் தமிழர் பகுதிகளை பாரபட்சத்தோடு நோக்குவதற்கு இச்சம்பவம் எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

வடக்குக் கிழக்குப் பகுதியைப் பார்வையிடுவதற்கு கொபிஅனான் ஏற்கனவே விருப்பம் தெரிவித்திருந்தார். எங்களுடைய உத்தியோகபூர்வ அழைப்பையும் ஐ.நா. அதிகாரிகளிடம் கையளித்தபோது எமது பகுதிக்கு விஜயம் மேற்கொள்ளும் சாத்தியப்பாடுகள் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. செய்தியாளர்கள் இது தொடர்பாக கொபிஅனானிடம் கேட்டபோது அவர் இக்கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். இதனை எமக்கு இலங்கைக்கான ஐ.நா. தூதுவரும் உறுதிப்படுத்தியிருந்தார்.

ஆனால், இதற்கு அரசு அனுமதியளிக்க மறுத்துவிட்டது. இச்செயலானது அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள பாடசாலைகள் தவிர்ந்த யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் முதலாம் தவணைக்காக இன்று ஆரம்பமாகின்றன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் போக்கிடமின்றி பாடசாலைகளில் தங்கியுள்ளதால் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதில் இழுபறிநிலை உள்ளது.

எனினும், பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள பாடசாலைகளை மாற்று ஏற்பாடுகள் செய்து வேறிடங்களில் மாலைநேரப் பாடசாலைகளாக இயங்குவதற்கு ஏற்றவகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் இவ்வாறான பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள பாடசாலைகள் அடுத்த


(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாரையும் பிரித்துப் பார்ப்பதாக எண்ணவேண்டாம்

# சமாதான முயற்சிகளுக்கு ஐ.நாவின் ஆதரவு தொடரும்

## செய்தியாளர் மாநாட்டில் கொபிஅனான்

(நமது நிருபர்)



**இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிக்கு ஐ.நா. தொடர்ந்து ஆதரவு வழங்கும். எனது இலங்கை விஜயத்தில் வட பகுதிக்குச் செல்லாததனால் யாரையும் பிரித்துப் பார்ப்பதாக எண்ண வேண்டாம். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டு உதவிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவா என்பதை ஐ.நா. சபை உன்னிப்பாக கண்காணிக்கும் என ஐ.நா. சபைச் செயலாளர் கொபி அனான் தெரிவித்தர்ர்..**

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தர்ர். அவர் மேலும் தெரிவிக்கையில்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநர் டிரோன் பெர்னான்டோ இன்று யாழ் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்ணாணடோ இன்று திங்கட்கிழமை யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

விமானமூலம் பலாலி வந்தடையும் அவர் இன்று காலை 10.40இற்கு யாழ். மாவட்டச் செயலகத்திற்குச் செல்லவுள்ளார். செயலகத்தில் முற்பகல் 11 மணிக்கு திணைக்களத் தலைவர்கள் உட்பட அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவு[illegible]

செயலகச் சந்திப்பை முடித்துக்கொண்டு நண்பகல் 12.[illegible]இற்கு யாழ். பொது நூலகத்திற்கு செல்லவுள்ளார். தொடர்ந்து வடமராட்சிப் பிரதேசத்திற்கு விஜயம்செய்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி முகாம் பொறுப்பாளர் மீது நள்ளிரவில் பொலிஸ்குழு தாக்குதல்

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

(துன்னாலை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் இடம்பெயர்ந்தோர் முகாமின் நிர்வாகக் குழு உறுப்பினர் பொலிஸாரினால் மோசமாகத் தாக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு குறித்த முகாம் அமைந்துள்ள வல்வெட்டித் துறை சிதம்பராக் கல்லூரிக்குச் சென்ற பொலிஸ் குழுவினர் குறித்த முகாமில் தங்கியுள்ளோரின் விபரத்தை தங்கியுள்ள மக்களிடம் பெற முயற்சித்துள்ளனர். இரவு நேரத்தில் மேற்படி விபரம் தரமுடி யாதென மக்கள் ஆட்சேபித்தபோது குறித்தமுகாம் நிர்வாகத்தினர் மக்களின் நிலைப்பாடுப்பற்றி விளக்கினர்.

திரும்பிச்சென்ற பொலிஸார் நள்ளிரவு 12 மணிக்கு மீண்டும் முகாமிற்குள் வந்து வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கடற்தொழில் சங்கப் பொருளாளரும் நிர்வாக உறுப்பினருமான இராசதுரை இந்திரராசா என்பவரைக் கடுமையாகத் தாக்கியதாக கூறப்படுகின்றது.

பின்னர் அவரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையம் கூட்டிச்சென்ற பொலிஸார் பொலிஸ் நிலையத்திலும் வைத்து மோசமாகத்தாக்கியதாகவும், தாக்குதலுக்குள்ளான அவர் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.சம்பவம்பற்றி அறிந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வு கழகப் பணிப்பாளருடன் கொபிஅனான் நேற்றுக் கொழும்பில் பேச்சு

### புலிகளின் பணிகளுக்குப் பாராட்டு

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி ஐ.நா. செயலாளர் கொபிஅனானை நேற்றுக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடலின்போது வடக்குக் கிழக்கு நிலைபரம் தொடர்பாகவும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் அவசர மனிதாபிமான உதவிகள் குறித்தும் றெஜி எடுத்துக் கூறினார்.

தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளும், புனர்வாழ்வுக் கழகமும் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்து கொபிஅனான் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக அனான் ஆர்வமாகக் கேட்டறிந்தார். அத்துடன் எதிர்காலத் திட்டங்கள் குறித்து றெஜி, அனானுக்கு விளக்கினார்.

இச்சந்திப்பின்போது ஆவணம் ஒன்றும் றெஜியினால் கொபிஅனானிடம் கையளிக்கப்பட்டது. (ச)

## கொபிஅனான் மாலைதீவுக்குப் பயணம்

ஐ.நா. செயலாளர் கொபிஅனான் தனது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று மாலைதீவு பயணமானார். சுனாமி கடல்அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை கொபிஅனான் இலங்கை வந்தார். இங்கு அரசியல் தலைவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தபின் அவர் நேற்றுமாலை மாலைதீவு பயணமானார். (ச-4)

# அமெரிக்க இராணுவத்தின் நிலைகொள்ளலை எதிர்த்து பலமான மக்கள் இயக்கத்தை முனெடுப்பது அவசியம்

## புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல்

(கொழும்பு)

சுனாமி அனர்த்த மீப்புப் பணி என்ற பெயரில் வரவழைக்கப் பட்டுள்ள அமெரிக்க இராணுவம் விரைவில் ஒரு ஆக்கிரமிப்புப் படையாக மாற்றம் அடையும் அபாயத்தையே தோற்றுவித்துள்ளது.

இவ்வாறான அமெரிக்க இராணுவத்தின் நிலை கொள்ளலை சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்து வரும் தமிழ் மக்களும், முழு நாட்டினதும் இறைமை சுதந்திரத்தின் மீது அக்கறை உள்ள அனைத்து மக்களும் தயவுதாட்சண்யமின்றி எதிர்த்து நிற்க வேண்டும்.

அமெரிக்க இராணுவத்தின் வருகைக்கு எமது புதிய ஜனநாயகக் கட்சி கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கின்றது. அதேவேளை அமெரிகக இராணுவத்தை வெளியேற்றப் பலமான மக்கள் இயக்கத்தை முன்னெடுப்பது அவசியமாகும்.

இவ்வாறு புதிய ஜனநாயகக கட்சியின் அரசியல் குழு சார்பல் அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில்,

நண்ட நாட்களாக இலங்கையின் பேரினவாத ஆளும் வர்க்க அரசாங்கங்களும், அதேபோன்று அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களும் கொண்டிருந்த உள் நோக்கங்கள் இப்போது சுனாமி அனர்த தத்தின் திரைமறைவில் நிறைவேறி இருக்கின்றது.

யுத்தம் இடம் பெற்ற வேளையிலும் பின்பு சமாதான சூழல் ஏற்பட்டு பேச்சுவார்த்தை இழுபட்டுச் சென்ற நிலையிலும் இங்கு வந்து புகுந்து கொள்ளமுடியாமல் தவித்து நின்ற அமெரிக்க இராணுவத்திற்கு இப்போது மிக உவப்பான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளில் அமெரிக்க இராணுவம் வெவ்வேறு காரணங்களைக் காட்டிப் புகுந்து கொள்வதும் பின்பு பெரும ஆக்கிரமிப்புப் படையாகி மக்களைக் கொன்று குவிப்பதும் அதன ஏகாதிபத்திய வழி முறையாகும்.

எனவே, இலங்கைக்குள் வநதுள்ள அமெரிக்க இராணுவம் ஆககிரமிப்புப் படையாக மாற்றமடையக் கூடிய அரசியல் ,பொருளாதாரச் சூழலே தென்னிலங்கை அரசியலில் காணப்படுகின்றது.

இவைமட்டுமன்றி, அமெரிக்க இராணுவத்தின் வருகை பிராந்திய மேலாதிக்க நாடான இந்தியாவை உள்ளூரச் சிந்திக்கவும் வைததுள்ளது. ஏற்கனவே இலங்கையை மையமாக வைத்துப் பனிப்போர் நடாத்திவந்த அமெரிக்க-இந்திய மேலாதிக்கப் போட்டியானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்கியும், முழு நாட்டின் இறைமை, சுதந்திரத்தை காலில் போட்டு மிதிக்கவும் கூடிய அபாயத்தையே தோற்றுவித்துள்ளது.

எனவே, வடக்கிலும் தெற்கிலும் உள்ள அரசியல் போராட்ட சக்திகள் தூரநோக்குடன் கூடிய ஏகாதிபத்திய-பிராந்திய மேலாதிக்க எதிர்ப்பு இயக்கங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது எனக். குறிப்பிட்டுள்ளது. (ந)

## வைத்திய சேவை

(மருதநங்கேணி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சுனாமி கடற்கொந்திளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களின் வசதி கருதி லண்டனில் பணியாற்றும் வைத்திய நிபுணர் ஒருவர் தொண்டு அடிப்படையில் பணியாற்றி வருகிறார்.

பருத்தித்துறை தம்பசிட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சசிகாந்தன் என்ற இவ் வைத்தியர் சொந்த அலுவலாக சொந்த ஊருக்கு வந்த வேளையே சுனாமி அனர்த்தங்களால் ஏற்பட்ட பாதிப்புக்களை நேரில் கண்டு உணர்ந்து இவ் வைத்திய சேவையை வழங்கிவருகிறார்.அத்துடன், ஒரு தொகுதி மருந்து வகைகளையும் இவர் இவ் வைத் தியசாலைக்கு வழங்கியுள்ளார். (க-35)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் தற்காலிக வீடு

இயற்கை அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளை தாமதமின்றிக் கட்டிக் கொடுப்பதற்கான திட்டமொன்றை விரைவில் அமுல்படுததவென, ஜனாதிபதி அலுவலகத்தின் தேசிய ஊக்குவிப்பு நிலையம் முகாமைத்துவக் குழுவொன்றை அமைத்துள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்க அதிகாரிகளின் உதவியுடன் இணைந்து இவ் வீடுகளைக் கட்டுவதற்கான ஆலோசனைகளை இக்குழு வழங்கும்.

முகாமைத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக பாதுகாப்புப் படையினரின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படும். (க-7)



யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே 13 வயதுக்குட்பட்டோர் பிரிவில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட சம்பியனாக தேவரையாளி இந்துக் கல்லூரி வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.படத்தில் பாடசாலை அதிபர் ம.குட்டித்தம்பி, விளையாட்டுப் பொறுப்பாசிரியர் கி.பாக்கியநாதன் ஆகியோருடன் அணிவீரர்கள் காணப்படுகின்றனர்.

# யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த மேஜர் ஜெனரல் பொன்சேகா குழுவினர் அனர்த்தங்களைப் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தலைமையகத்தின் தலைமை அதிகாரியாகப் பதவியேற்ற மேஜர்ஜெனரல் பீ.எஸ்.சி. பொன்சேகா மற்றும் தொண்டர் படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் என்.மல்லராய்ச்சி ஆகியோர் கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு பலாலி விமான நிலையத்திற்கு வருகை தந்த போது அவர்களை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ரி. தென்னக்கோன் வரவேற்றார்.

யாழ்.மாவட்டத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட இந்த உயர் அதிகாரிகள் குழுவினர் கடல்கொந்தளிப்பு அனர்த்தத்தினால் காயமடைந்தும் உயிரிழந்தும் காணாமல் போனோர்கள் மற்றும் ஏற்பட்ட அழிவு கள் குறித்தும் விரிவாகக் கேட்டறிந்தனர். கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறித்து யாழ்.மாவட்டத் தளபதி அவர்களுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

பின்பு காங்கேசன்துறை பிரதேசத்திற்கு சென்ற இந்த உயா அதிகாரிகளை வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் தர்மபிரிய வரவேற்று, கடல்கொந்தளிப்பினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறித்து விளக்கமளித்தார். பின்பு அப்பிரதேசத்தைப் பார்வையிட்ட இவர்கள், 515 வது படைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த உணவுக் களஞ்சியத்தில் ஏற்பட்ட அழிவுகள் குறித்தும் அவதானித்தனர்.

52வது சேனையகத்தின் கட்டளை அதிகாரி சேனாதிபதி பிரிகேடியர் என்.ஆர்.ஜயசூரிய இந்த இராணுவ அதிகாரிகளை 524 வது படையணித் தலைமையகம் அமைந்துள்ள பருத்தித்துறை,வல்வெட்டித்துறைப் பகுதிக்கும் அழைத்துச் சென்று, சிங்க படைப்பிரிவின் 2தொண்டர் படைப் பிரிவு, மணல்காட்டுப் பகுதியல் நிலைகொண்டுள்ள கெமுனு படைப் பிரிவின் 2 வது தொண்டர் படைப் பிரிவு போன்றவற்றிற்கும் அழைத்துச் சென்றார்.

அங்கு ஏற்பட்ட அனர்த்தங்களை இவர்கள் அவதானித்ததுடன், அந்தப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள படையினரின் மத்தியிலும் உரையாற்றினர். மேலும் மணல்காட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களையும் அவர்கள் அவதானித்தார்கள்.

இறுதியாக 55 வது சேனாதிபதி பிரிகேடியர் வீ.ஆர். சில்வா இந்த அதிகாரிகளை வரவேற்று மணல்காடு மற்றும் 551 வது படையணி நிலைகொண்டுள்ள பிரதேசம், 8/9 வது கெமுனு படையினர் நிலைகொண்டுள்ள பகுதி ஆகியவற்றுக்கு அழைத்துச் சென்று அனர்த்தங்களை காட்டினா. இங்கும் படையினா மத்தியில் இராணுவ அதிகாரிகள் உரையாற்றினர். (ந)

## வீர வணக்கம்

முல்லைத்தீவில் ஏற்பட்ட கடல் பெருககில் சிக்கி சாவடைந்தவர்களான கடற்புலிகளின் துணைப்படை வீரா ஜெயானந்தன் அன்ரனி சாள்ஸ் நாட்டுப்பற்றாளர் அல்வாய் சக்கோட்டையைச் சேர்ந்த பிலோமினம்மா ஜோர்ச் ஆகியோருக்கு தமிழீழவிடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துள்ளனர். (க-51)

## அருள் ஒளி வெளிவந்துள்ளது

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தினால் மாதாந்தம் வெளியிடப்பட்டுவரும் "அருள் ஒளி" மார்கழி மாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. அறம்காக்கும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக் குட டியின் அகவை-80 நிறைவுச் சிறப்பு மலராக இவ் இதழ் வெளி வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## "ஞானச் சுடர்" வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)


தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம வெளியிடப்படும் "ஞானச்சுடர்" மார்கழி மாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. (க)

## பருவகாலச் சீட்டுக்களை 15 ஆம் திகதிவரை பெறலாம்

(மருதங்கேணி)

யாழ்.மத்திய பஸ் நிலையத்தல் மாணவர்களுக்கான இம்மாதத்துக்கான பஸ் போக்குவரத்து பருவ காலச் சீட்டுக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை வழங்கப்படும் என யாழ்.மத்திய பஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்களே இப்பருவகால சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (க-35)





அல்வாய் மனோகரா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்ற வினோத உடை நிகழ்வில் கத்தரிக்காயாகக் காணப்படும் செல்வன் பாக்கியநாதன் லோஜிதனை அறிவிப்பாளர் பேட்டி காண்பதனையும் ஏனைய பல்வேறு வேஷங்களில் தோன்றிய சிறார்களையம் படங்களில் காணலாம்.

# நகைகளைத் திருடிய நபருக்கு இரு வருட கடூழியச் சிறை

(யாழ்ப்பாணம்)

கன்னாதிட்டியில் உள்ள நகைக்கடை ஒன்றை உடைத்து 99 ஆயிரத்து100 ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிய குற்றச் செயலின் பேரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவரை யாழ்.பொலிஸார் கைது செய்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதனை விசாரித்த நீதிபதி பிரஸ்தாப நபருக்கு 2வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்தார்.

இத் தண்டப் பணத்தைக் கட்டத் தவறின் மேலும் 1வருட கடூழியச் சிறைத் தண்டனையை இவ் இளைஞன் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதியால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன், திருடப்பட்ட நகைகளை இளைஞரிட மிருந்து மீட்டு கடை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறும் யாழ். பொலிஸாருக்கு நீதிபதியால் கட்டளையிடப்பட்டுள்ளது. (ந-19)

# ஆயுள்வேத திணைக்களத்தில் 10 பதவிகளுக்கு வெற்றிடம்

ஆயுள்வேத திணைக்களத்தினால் ஆயுள்வேத திணைக்களத்தின் நாவின்ன பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையததின் மருந்து ஆராய்ச்சி தரவளவு கண்காணிப்பு இரசாயன கூடம் மற்றும் தாவரப் பிரிவில் உள்ள பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தலைமை விஞ்ஞான அலுவலர் (இரசாயன) (விஞ்ஞான அலுவலர் தரம்-I,) தலைமை விஞ்ஞான அலுவலர் (தாவரவியல் சார்ந்த விஞ்ஞான அலுவலர் தரம் -I), விஞ்ஞான அலுவலர் (இரசாயனம்) வகுப்பு II , தரம் I, விஞ்ஞான அலுவலர் (தாவரவியல் சார்ந்த) வகுப்பு தரம் I, விஞ்ஞான அலுவலர் (இரசாயனம்) வகுப்பு II, தரம் II, விஞ்ஞான அலுவலர் (தாவரவியல் சார்ந்த) வகுப்பு II, தரம் II, ஆராய்ச்சி உதவியாளர் (தாவரவியல் சார்ந்த), தொழில்நுட்ப அலுவலர் (இரசாயனம்), தொழில்நுட்ப அலுவலர் (தாவரவியல் சார்ந்த), விஸ்தரிப்பு அலுவலர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரி கொண்டிருக்க வேண்டிய தகைமைகளையும், மேலதிக விபரங்களையும் இம் மாதம் 7ஆம் திகதி வெளியான வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (ற-19)

# அனுமதியின்றி தத்தெடுத்த சிறுவர்களை பொலிஸ் நிலையங்களில் உடன் ஒப்படைக்குக!

## சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தைத் திணைக்களம் அறிவிப்பு

(புத்தளம்)

கடல்கோள் அனர்த்தத்தால் பெற்றோரை இழந்து பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள சிறுவர்களை எவ்வித அனுமதியுமின்றி தத்தெடுத்துக் கொண்டவர்கள் உடனடியாக அச்சிறுவர்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்குமாறு சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தைத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த சில தினங்களாக இவ்வாறான பிள்ளைகளைத் தத்தெடுத்துக் கொள்ளவென நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பெரும் எண்ணிக்கையிலானோர் வருகை தந்த வண்ணமுள்ளனர்.


இதேவேளை, சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் அனுமதியின்றி சிறுவர்களைத் தத்தெடுப்பவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென திணைககளம் அறிவித்துள்ளது.

இவ்வாறு பாதிப்புக்குள்ளான சிறார்களைப் பராமரிக்கவென அரசாங்கம் ‘சிறுவர் கிராமங்களை’ அமைப்பது குறித்துக் கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-15)

# மீட்புப்பணியில் ஈடுபட்ட இளைஞன் படுகாயம்

வல்வெட்டித்துறைப் பகுதியில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞன் தீராந்தி மீதிருந்து கீழே விழுந்ததில் படுகாயமடைந்துள்ளார். கருணாகரன் (வயது 23) என்ற இளைஞனே தீராந்தியிலிருந்து கீழே விழுந்ததில் காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இவரை மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அங்கு சிகிச்சையளிக்க எக்ஸ்ரே இல்லாத காரணத்தினால் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ற-35)



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் அறங்காவலர் சபை வருடந்தோறும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வருகிறது.

இம்முறை இடம்பெற்ற உபகரணம் கையளிப்பு நிகழ்வில், ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் எஸ்.அன்னலிங்கம் மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணத்தை வழங்குவதைப் படத்தில் காண்க. அருகில் அறங்காவலர் சபை அங்கத்தவர் வி.சூரியபிரகாஷும் உள்ளார்.

(படம் : மருதங்கேணி செய்தியாளர்)

# யாழ். மாநகர சபையின் உள்ளக பதவிவெற்றிடங்கள்

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகரசபையில் நிலவுகின்ற பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு 'நிரந்தர ஊழியர்களிடமிருந்தும் சமயா சமய ஊழியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ சனசமூக நிலைய மேற்பார்வையாளர்
- ★ சுகாதார மேற்பார்வையாளர்
- ★ சந்தை மேற்பார்வையாளர்
- ★ பாதுகாப்பு உத்தியோகத்தர்
- ★ ஓடலி (மேற்கத்தேயம்)
- ★ ஓடலி (ஆயுள்வேதம்)
- ★ சுகாதார பாதுகாவலர்
- ★ வருமான மேற்பார்வையாளர்

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சையில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்கள் உள்ளிட்ட 6 பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும்.

இதேபேன்று மரவேலை செய்பவர்கள் ‘சாரதிகள், இயந்திரம் திருத்துநர், மேசன், பம்பி இயக்குநர், ஏவலாளர், காவலாளி இரும்பு ஒட்டுநர், பொருத்துநர் போன்ற பதவிவெற்றிடங்களும் நிரப்பப் படவுள்ளன.

இப் பதவிக்கு 8 ஆம் வகுப்பில் சித்தியடைந்து சேவை அனுபவம் மிக்கவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் கிளைத் தலைவரின் சிபார்சுடன் 19.01.2005 இற்கு முன்னர் யாழ். மாநகரசபை செயலாளரிடம் விணணப்பங்களை நேரில் கையளிக்க முடியும் என மாநகரசபை ஆணையாளர் க.குணராசா அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் நூலக சேவகர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது தெரிந்ததே. (க-51)

# நெஸ்பிறே நிறுவனம் பாதிப்புற்றோருக்கு உதவி



(துன்னாலை)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நெஸ்பிறே நிறுவனம் மகிநூடில்ஸ், நெஸ்பிறே பால் பைக்கற் போன்றவற்றை வடமராட்சியில் உள்ள 16 இடம்பெயர்ந்த முகாம்களுக்கு விநியோகித்தனர்.

அத்துடன், நெஸ்பிறே பால்மா பைக்கற்-900, நெஸ்பிறே பால் பைக்கற் - 820, லக்ரோயன் No 1- 360, லக்ரோயன் No 2- 360, மகி நூடில்ஸ் - 1800 என்பவற்றை வடமராட்சி சுனாமி கடல் அனர்த்த உடனடி மனிதாபிமான கருமபீடத்தில் ஒப்படைத்தனர்.

வடமாகாண பிராந்திய முகாமையாளர் சி.ரவீந்திரன் நேற்றுமுன் தினம் இவற்றை சம்பிரதாய பூர்வமாக வழங்கினார். (க-101,108)

## பாடசாலைகளில் மாலைநேர வகுப்புக்கள்

பூகம்பப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள முக்கிய பாடசாலைகளில் மாலை நேர வகுப்புக்களை நடாத்துவதென கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அனர்த்தத்தினால் சேதமடைந்துள்ள 59 பாடசாலைகளை இந்த மாத முடிவுக்குள் கட்டி முடிப்பதற்கான விஷேட திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. (க-7)



சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதன் காரணமாக வடமராட்சியில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார சேவைகள் ஒருங்கிணைப்புச் செயலகமும், அங்கு கூடியுள்ள வைத்தியர்களையும் வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் மருந்துப் பொருட்களையும் படத்தில் காணலாம்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு பங்கீட்டு அட்டை மூலம் நிவாரணம்

(கொழும்பு)

‘சுனாமி’ அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் மாதாந்த நிவாரணக் கொடுப்பனவை வழங்குவதற்கு சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் நலன்புரித் திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சமூக நலன்புரி அமைச்சின் செயலாளர் சித்தா ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்படி பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் மாதம் மாதம் 1500 ரூபா பெறுமதியான பங்கீட்டு அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பங்கீட்டு அட்டைகள் மாவட்ட செயலகங்கள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் எனவும் அவற்றைக் கொண்டு கூட்டுறவு விற்பனை நிலையங்களில் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும் எனவும் சித்தாராஜ பக்ஷ கூறினார்.இதற்குத் தேவையான நிதி சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட அன்றாட ஜீவனோபாயத்திற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் சேதமடைந்திருந்தால் அவற்றை கொள்வனவு செய்யும் முகமாக 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமூக நலன்புரியமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.(க-9)



சுவாமி சத்யோயதா, யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியிடம் தாம் கொண்டு வந்த மருந்துப் பொருட்களை உத்தியோக பூர்வமாக வடமராட்சியிலுள்ள சுனாமி அனர்த்த புனர்வாழ்வு கருமபீடத்தில் வைத்து வழங்குகிறார்.

(படங்கள் : எஸ்.இராமச்சந்திரன்)

# இன்று ஒரு தகவல்

## உடல் மொழி

ஒருவர் யாரிடமோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசிக்கொண்டிருப்பது என்னவென்று நமது காதில் விழவில்லை. இருந்தாலும் அவர் பேசிக் கொள்வது நல்ல செய்தியா. கெட்ட செய்தியா என்பதை அவரது முகத்தைப் பார்த்தே நம்மால் யூகிக்க முடிகிறது.

மகிழ்ச்சியான செய்திகளைப் பேசும் போது முகம் மலர்கிறது. புன்னகை பூக்கும். இதில் ஒருவிடயத்தைக் கவனியுங்கள். நம்மிடம் பேசிக்கொண்டிருப்பவர் எதிரில் இல்லை. அவர் நமது குரலை மட்டும் தான் கேட்கப்போகிறார். நமது முகம் எப்படியிருக்கிறதென்பதை அவர் பார்க்கப்போவதில்லை. அப்படி இருந்தும் நமது முகம் ஏன் மலர வேண்டும்?

இதைத்தான் 'உடல்மொழி' என்கின்றார்கள். நம்மையறியாமலேயே நமது உடல் செய்திகளைத் தெரிவிக்கின்றது பாருங்கள். அதுதான் உடல் மொழி. ஒருவர் தொலைபேசியில் பேசுவதை நீங்கள் தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டே அவர் நண்பருடன் பேசுகிறாரா? மனைவியுடன் பேசுகிறாரா? குழந்தையுடன் பேசுகிறாரா? மேலதிகாரியுடன் பேசுகிறாரா? அவருக்குக் கீழே வேலை செய்பவரிடம் பேசுகிறாரா? என்பதைக் கண்டுபிடிக்கலாம். காரணம் உடல் மொழி. இதைப்பற்றியெல்லாம் கூட சில நிபுணர்கள் சில விபரங்களைச் சொல்கிறார்கள்.

குறிப்பாக ஒருவர் அவரது நாற்காலியில் கிட்டத்தட்ட படுத்துக்கொள்ளாத குறையாக உட்கார்ந்திருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். எதிரிலிருப்பவர் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம். தலை சொறிவது, வேறு வேறு திசையில் பார்ப்பது, கொட்டாவி விடுவது, கால்களை மாற்றிப்போட்டு உட்காருவது, களைப்பாகக் கைவிரல்களைப் பின்னிக் கொள்வது, அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பது இப்படியெல்லாம் ஒருவர் செய்து கொண்டிருந்தால் நாம் விரைவாக அவ்விடத்தை விட்டுவெளியேறி விடுவது நல்லது.

ஏனென்றால் இதெல்லாம் அவரது சலிப்பு, சோர்வு, ஆர்வமின்மை இதற்கு அடையாளம். நமது பேச்சு அவருக்கு ஆர்வமில்லை என்று அர்த்தம். அதே நேரத்தில் நாற்காலி நுனியில் அமர்ந்து உடலை முன்னுக்கு நகர்த்தல் எதிரில் இருப்பவர் கண்களைப் பார்த்துக்கொண்டே பேசினாலும் சரி அல்லது பேச்சைக் கேட்டாலும் உங்கள் மீது மற்றவர்களுக்கு உள்ள பிடிப்பு அதிகரிக்கும். நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை நமது உடலும் நடை, உடை, பாவனையும் அடுத்தவர்களுக்குக் காட்டிக் கொடுத்து விடும்.

உங்கள் உடல், உங்கள் பார்வை, நடை, உட்காரும் விதம் போன்றவற்றை வைத்துக் கொண்டே நீங்கள் பொறுப்பானவரா, முரடரா, அலட்சியமானவரா, மரியாதை தெரிந்தவரா, அடக்கமானவரா, நம்பிக்கைக்கு உரியவரா, நாணயமில்லாதவரா, பயந்தவரா, திறமைசாலியா, அப்பாவியா என்பதைக் கண்டுபிடித்துவிடலாம்.

அதனால் உடல்மொழியைப் புரிந்துகொண்டு நம்மைக் கொஞ்சம் சரிசெய்து கொண்டால் வாழ்வில் சுலபமாகப் பல காரியங்களைச் சாதித்து விடலாம்.

ஒரு மனநல மருத்துவமனை. அங்கே ஒருவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கார் ஓட்டுவது போல் பாவனை செய்து கொண்டிருந்தார். ஸ்டியரிங்கைத் திருப்புவது போலவும், பின்னால் வரும் வாகனத்தை நிற்கச் சொல்வது போலவும், அதன்பின் இவர் ஒதுங்கிக் கொண்டு அவருக்கு வழிவிடுவது போலவும் சேஷ்டைகள் செய்து கொண்டிருந்தார். அதைப் பார்த்த ஒருவர் பக்கத்தில் இருந்த ஒருவரிடம் "இவர் ஏன் இப்படிச் செய்கிறார்?" என்று கேட்டார். "இவருக்கு கார் ஓட்ட வேண்டும் என்று ஆசை. அது நிறைவேறாமல் போனதால் இப்படிச் செய்கிறார்" என்றார் அவர். "நீங்கள் சொல்லக் கூடாதா? இப்போது நீங்கள் கார் ஓட்டவில்லை. வெறும் கதிரையில் தான் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று" என்றார் அவர். அதற்கு இவர் "அது முடியாது சார். ஏனென்றால் அந்தக் காரை கழுவுவதற்காக தினமும் எனக்கு 10 ரூபா கொடுத்துக் கொண்டிருக்கிறார்" என்றார்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# படைகளை மீளக் கட்டியெழுப்புவது அரசாங்கத்திற்கு மிகப் பெரிய சவால்

## 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியீடு

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்டுள்ள சுனாமி கடற் கொந்தளிப்பால் இராணுவம் பாரிய அழிவைச் சந்தித்திருப்பதாகவும், இந்த அழிவுகளிலிருந்து படைகளை மீளக் கட்டியெழுப்புவது அரசுக்கு பெரும் சவாலாக எழுந்திருப்பதாகவும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியான இந்த இதழில் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இது குறித்து மேலும் எழுதியிருப்பதாவது, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டது முதல் எந்த இராணுவத் தயார்ப்படுத்தலும் இன்றிக் காணப்பட்ட படைத்துறை, சுனாமி அனர்த்தத்தால் ஆளணி ரீதியாகவும் ஆயுத தளபாட ரீதியாகவும் பேரழிவைச் சந்தித்துள்ளது. முக்கியமான இடங்களில் படைகள் பற்றாக்குறை, ஆயுததளபாட பற்றாக்குறை, படைகளிலிருந்து இராணுவம் தப்பியோட்டம், வெளிநாட்டுக்கு அமைதிப்படைகளென இராணுவத்தினர் அனுப்பப்பட்டமை என பல்வேறு வகையிலும் நெருக்கடிகளைச் சந்தித்து வந்த படைத்துறை, சுனாமி அனர்த்தத்தால் மேலும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது.

இராணுவம் இன்று எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய அழிவானது வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அரசு கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து பிரிக்கும் இராணுவத்தின் முன்னணிக் காவலரண்களில் பெரும்பாலானவை வெள்ளத்தால் முற்றாக அடித்துச் செல்லப்பட்டமையாகும்.

மட்டக்களப்பு, கல்லடி இராணுவ முகாம் தற்போது அவ்விடத்தில் இல்லை. வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட இந்த முகாமிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களும் கடலுடன் சங்கமமாகிவிட்டன. அதே போன்று கல்குடா இராணுவ முகாமும் முற்றாக அழிந்து விட்டது. அங்கு நிலைகொண்டிருந்த 232 ஆவது படைப்பிரிவின் அதிகாரியும் அவரது படையினரும் அனர்த்தத்தில் இறந்துவிட்டனர். அதேபோன்று கடற்படைத் தளங்களும் பாரிய அழிவைச் சந்தித்துள்ளன.

முக்கிய தளங்கள் அமைந்துள்ள பருத்தித்துறை, மணற்காடு மற்றும் காலி ஆகியவையும் திருகோணமலைக்கு வடக்கே அமைந்துள்ள உபதளங்களும் அழிவைச் சந்தித்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் அதிரடிப் படையினரும் பாரிய அழிவைச் சந்தித்துள்ளனர்.

கோமாரி, அறுகம்பை, அம்பாறை ஆகிய இடங்களிலுள்ள அதிரடிப்படை முகாம்கள் ஆழிப் பேரலையின் பயங்கரத் தாக்குதல்களைச் சந்தித்தன.

இந்த அழிவுகளிலிருந்து படைத்துறையை மீளக் கட்டியெழுப்புவது பிறந்திருக்கும் புது வருடத்தில் அரசுக்கு பாரிய சவாலாக எழுந்துள்ளது. இந்தத் திட்டத்துக்கு நிதியொதுக்குவது என்பது அரசுக்கு பாரிய சிக்கலாக இருக் கும் என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சுனாமி அனாத்தத்தால் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், சில முகாம்கள் பாதிக்கப்பட்டதால், ஆறு இராணுவ அதிகாரிகளும் 90 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர். எனினும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எந்த பலவீனமும் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ளார். (ற-4)

# இராசி பலன்

**10.01.2005** (மார்கழி 26 திங்கட்கிழமை)

அமாவாசை முன்னிரவு 06.33 மணிவரை
பூராடம் முன்னிரவு 06.59 மணிவரை
இராகுகாலம் 08.03 - 09.33 மணிவரை
சுபநேரம் 12.33 - 2.03 மணிவரை
அமாவாசை விரதம்.

**மேடம்** புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை, உடல் நலக்குறைவு, பொருள் விரயம்.

**இடபம்** மனக்கவலை, பொருள்விரயம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், நண்பர்கள் விரோதம்.

**மிதுனம்** கீர்த்தி, அபூர்வ சந்திப்பு, புதிய முயற்சி, கலந்துரையாடல்.

**கடகம்** தேகநலன், பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி.

**சிங்கம்** அஜீரண ரோகம், காரிய இடையூறு, மனக் கவலை, போசனசுகக் குறைவு.

**கன்னி** தன்னம்பிக்கைக் குறைவு, பிரயாண கஷ்டம், முயற்சி தாமதம், தன விரயம்.

**துலாம்** சகோதரர் உதவி, பிரயாண நன்மை, செல்வாக்கு, தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**விருச்சிகம்** வீண் வார்த்தை, அமைதிக்குறைவு, காரியதாமதம், பண விரயம்.

**தனுசு** நல்ல வரவேற்பு, போசன நன்மை, சயன சுகம், முயற்சி கைகூடும்.

**மகரம்** சோம்பல் நிலை, எடுத்தகருமங்கள் தாமதமாகும், பிரயாணம், தன விரயம்.

**கும்பம்** சகோதரர் உதவி, காரிய அனு கூலம், தெய்வ சிந்தை, பொருள் சேர்க்கை.

**மீனம்** எடுத்த காரியம் கைகூடும், ஆரோக்கியம், அதிகாரம், போசன நன்மை.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

- வளவன்

# விஜயபாகு கடற்தளத்தை இந்திய படை சீரமைக்கிறது

(திருகோணமலை)

திருகோணமலை நிலாவெளி விஜயபாகு கடற்படைத்தளத்தை மீளக்கட்டியெழுப்பும் பணியில் இந்தியக் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்தம் காரணமாக நிலாவெளி கடற்படைத்தளம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அங்கு தரித்து நின்ற கடற்படையின் சிறிய கப்பல்கள் உட்பட படைத்தளபாடங்கள் நீரில் அடித்துச்செல்லப்பட்டன. இந்தத் தளத்தை மீளக் கட்டியெழுப்பும் பணிக்கு உதவும் முகமாக இந்தியக் கடற்படையின் பொறியியலாளர் குழுவினருடன் இரண்டு உயரதிகாரிகள் அடங்கிய 25 கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். கரையோரப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட கடற்படைத் தளங்களை மீளக்கட்டியெழுப்பும் பணியில் மேலும் பல இந்தியக் கடற்படைக் குழுக்கள் பயன்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் இலங்கைக்கு ஏற்பட்ட அழிவுகளிலிருந்து இலங்கையை மீளக்கட்டியெழுப்புதவற்கு இந்தியா வழங்க முன்வந்திருக்கும் உதவிகளில் படைமுகாம்களை சீரமைத்துக் கொடுப்பதும் அடங்குவதாகத் தெரிகின்றது.

இதேவேளை, இந்தியக் கப்பலொன்று திருகோணமலை அஷ்ரப் இறங்கு தளப்பகுதியில் நங்கூரமிட்டுள்ளது. அக்கப்பலில் கொண்டு வரப்பட்ட பத்து மெற்றிக்தொன் உலர் உணவுப் பொருட்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன. (இ-4)

# பல்கேரிய யுத்தக்கப்பல் தென்னிலங்கைக் கடலில்!

(கொழும்பு)

பல்கேரிய நாட்டு யுத்தக்கப்பலொன்று தென்னிலங்கைக் கடற்கரையோரமாக நங்கூரமிட்டுள்ளது.

இந்தக் கப்பலையும் கப்பலில் கடமையாற்றும் சிப்பந்திகள் மற்றும் கடற்படையினரையும் பல்கேரிய நாட்டின் இலங்கைக்கான தூதுவர் சிறிஸ்ரோ யோடனோ சென்று பார்வையிட்டு நலன் விசாரித்துள்ளார்.

'பசுபிக்குயிஸ்ட்' என்ற இந்தக் கப்பல் கடல் அனர்த்தத்தால் பல்கேரிய நாட்டுடன் தொலைத்தொடர்புகளை இழந்திருந்தது. அவசர தேவைக்காக இலங்கையின் கரையில் இது நங்கூரமிட்டுள்ளதாகவும் பல்கேரிய அரசு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் கடந்த 26ஆம் திகதி இந்திய நவசிவ துறைமுகத்திலிருந்து புறப்பட்டு சிறிது நேரத்தில் கடல் அனர்த்தம் ஏற்பட்டதாகவும் அதன் பின்னர் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்ததாகவும் பல்கேரிய அரசு தெரிவித்துள்ளது. (ற-4)

# முகிழ்நிலை ஆசிரியர்களின் கவனத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி மாலை 6.00மணிக்கு முன்பாக கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு பீடாதிபதி தி.கமலநாதன் கேட்டுள்ளார்.

இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான செயற்பாடுகள் அனைத்தும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

## நீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

33

**வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்**

பிறரால் வல்லிபுரத்தினொடு படுத்திப்பேசப்பட்ட சிங்கையாரியர் வேறு வைபவமாலையாரால் கனகசூரியனுக்கு முற்பட்டுள்ளவராகப் பேசப்பட்ட சிங்கையாரியர் வேறாமோ எனின் அற்றன்று அவர்கள் வல்லிபுரத்தொடு படுத்திச் சொல்லியிட்டதும் வைபவமாலையார் சொல்லியிட்ட இச் சிங்கையாரிய ஆரியரையே சுட்டித்தான் இவர்களன்றிப் பிறகொரு சிங்கையாரிய பரம்பரையுமில்லை. எனவே அச் சாசனம் சொன்னது இந்நல்லூர்ச் சிங்கையாரியரையே என்று துணிக அதுவே துணிபாயின் அவ் வல்லிபுரத்தில் சிங்கை நகருமில்லை சிங்கையாரியருமில்லை என்பது மேலுந்துணிபால் காண். "பாதர்" குவைறேஸ் கூறும் சிங்கை நகர் மதிலும் இந்நல்லூர் சிங்கைநகரத்தின் மதிலாம் என்க.

சிங்கையாரியர் ஒன்றேயொரு பரம்பரையாகவும் அவர் இருந்த தலைநகர் என்று சொல்ல அப்பிறர் சிங்கைநகர் என்று சுட்டியமைதான் என்னையெனின் அது அன்னார் அம்மாலையாரின் உள்ளக்கருத்தையோ வரலாற்றின் உண்மையையோ ஓர்ந்துகொள்ளாமே நல்லூர் வேறு சிங்கைநகர் வேறு என்று பிறழ விளங்கிக்கொண்டதும் வைபவமாலையார் அறியாமலே செப்பினார் என அவர் அறிவுடமைக்கும் அறியாமை கற்பித்துக்கொண்டு தாம் தமது அறிவின் மதுகையாலே வல்லிபுரத்திலே சிங்கைநகரை அதிசமர்த்தாகக்கண்டு விட்டோம். சிங்கை ஆரியரும் அந்நகரிற்றான் உறைந்தார் என தம் திரிபுணர்வை மெய்யுணர்வென்று கருதிக் கொண்டமை தான் காரணம் என்க. அந்நகர் கட்டடத்திலலே இவர் தாமும் சிக்குப்பட்டு யாழப்பாணச் சரித்திரத்திலும் ஒரு பெருங்சிக்கலை உண்டாக்கி விட்டனர் என்க. அச்சிக்கல் ஈண்டெடுக்கப்பட்டது.

ஊரின் பெயர் நல்லூர் அந்நகரின் பெயர் சிங்கை என்பது அந்நகர்க்கு நல்லூர் ஊரால் தொடர்புபட்டது... சிங்கை பெயரால் தொடர்புபட்டது நல்லூர் என்னும் ஊரிலே சிங்கை என்னும் பெயரையுடைய கோட்டையை- தலைநகரைக் கட்டினான் என்க. உயரப்புலத்திலே நம்பி இலக்குமிவாசத்தைக் கட்டினான் என்பது போல உயரப்புலம் காணிப்பெயர் இலக்குமிவாசம் வீட்டின் பெயர் நல்லூர் என்னும் ஊரிலே கட்டப்பட்ட அத்தலைநகரின் புறநகர் மதிலிலே கொழும்புத்துறைக்கும் நல்லூருக்குமிடையிலே சிங்கைநகர் என்று எழுதப்பட்டிருந்தால் நல்லூரில் கட்டப்பட்டநகரின் பெயர் சிங்கைநகர் என்று விளங்கவில்லையா? ஈண்டுசிக்கலும் சீங்கியது ஐயம் தெளிந்தது உண்மையும் தெரிந்தது இனி இன்னும் நுட்பமான பகுதிகட்குப் போவோம் என கனகசூரியன் இருந்த நகரத்தைத்தானே செண்பகப் பெருமாள் கைப்பற்றினான். செண்பகப்பெருமாள் இருந்த அதே நகரைத்தானே திரும்பக் கனகசூரியள் கைப்பற்றினான். கனகசூரியன் மகன்தானே பரராசசேகரன் அவனும் அத்தலைநரில் இருந்து தானே அரசாண்டான். பரராசசேகரனின் மூன்றாவது மனைவியின் வைப்புப் பெண்ணாகிய மங்கத்தம்மாள் சங்கிலியென்றும் ஒருவனைப் பெற்றாள் (யா.வை.மா. பக்.49)

அவன் மகன் தானே சங்கிலி மன்னன். அவனும் அத்தலைநகரிலிருந்து தானே அரசியற்றினான் எனவே போர்த்தர் வரும்போது சங்கிலி நல்லூரில் இருந்தானல்லவா எனவே போர்த்தர் படை எடுத்த நகரம் சிங்கை நகரமல்லவா? போத்தர் படை எடுத்தது நல்லூருக்கல்லவா, யாம் "கோட்டை வாசல்" என்னும் பெயருடைய பெரிய நிலப்பரப்பினை ஆராய்ந்து கோட்டை வாசல் இருந்து மறைந்த பின்னர் அவ்வாசல் இருந்த இடம் தோம்பில் கோட்டை வாசல் என்று குறிப் பெழுதபட்டிருக்கிறது. அது நாயன்மார்கட்டுச் சநதிக்கண்மையில் இருப்பதால் நல்லூர்க் கோட்டைவாசல் என்று நிரூபணம் செய்தோம். நல்லூர் ஊர்ப்பெயரென்றும் அவ்வூரில் கட்டப்பட்ட நகர்க்குச் சிங்கைநகர் என்றும் மேலே வலியுறுவதால் சிங்கைநகர் வாசலும் அதுவே தான் என்க.

போர்த்தர் 1590ல் சங்கிலியன் மீது படை எடுத்து வந்தபோது கொழும்புத்துறைக்கும் நல்லூருக்குமிடையில் சிங்கைநகர் என்னுமதில் இருந்திருக்கிறதென்பதை சு.ஞா. அவர்கள் சொல்லியுள்ளமையும், மேலே காட்டினோமல்லவா மேற்படி வாசல் கொழும்புத்துறைக்கும் நல்லூருக்கும் இடையில் அல்லவா இருக்கிறது. எனவே நல்லூரிலே சிங்கைநகர் உண் டென்பதை அத்தூது நூலும் மெய்ப்பிக்கிறது என்க. எனவே செண்பகப்பெருமாள் வரமுந்தியே நல்லூரில் நலைநகரம் இருந்திருக்கிறது என்க.

## 25. புகழேந்திப்புலவர் வரவு

விக்கிரமசோழன் இரண்டாம் குமாரகுலோத்துங்கன் என்னுஞ் சோழவரசர் காலத்திலே (கி.பி.1118-1146) அவன் அரண்மனைப் புலவராகிய புகழேந்திப்புலவர் கதிர்கரம யாத்திரையின் பொருட்டு இலங்கைக்கு வந்த ஞான்று சிங்கைநகர் அரசனைக்கண்டு அவனைப்பாடி யானையும் நிதியும் பரிசிலாகப் பெற்றுச் சென்றார். பெற்ற இபம் புலவர் வீட்டு வாசலிலே கட்டப்பட்டிருப்பதை அறிந்தசோழனும் பாண்டியனும் அதனைப் பெறும்வண்ணம் புலவரிடம் போன காலத்து

'புலவர் பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்கும்
காவலர் நிற்கும் படி வைத்தவா கண்டி யொன்பதிலும்
மேவலர் மார்பினுந் திண்டோளினுஞ் செம்பொன் மேருவினும்
சேவெழுதும் பெருமான் சிங்கையாரிய சேகரனே

எனத் தமக்குப் பரிசில்தந்த அரசன் பெருமைதோன்ற முன்னிலையாக வைத்துப் புகழ்ந்தும் அவ்வரசன் இறந்ததைக் கேள்விப்பட்டபோது

அ.ஆ.வீதியோ சுடல்வா ரியர் கோமான்
எ.ஏவலரா லிறந்த நாள் -ஓஒ
தருக்கண்ணிலுங் குளிர்ந்த தண்ணிளிதந் தாண்ட
திருக்கண்ணுஞ்சுடுமோ தீ

எனக்கவன்று தனக்கு அளிசெய்த கண்ணைப் புகழ்ந்தும் பாடினார் புகழேந்திப்புலவர். பாடியபாக்களில் இருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே இச்சிங்கை நகரரசர் சிங்கையாரிய அரசர் பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் பட்டப்பெயர்களையும் விடைக்கொடி சேதுவாஞ்சனை முதலிய வரச சின்னங்களையுமுடையவர்களாயிருந்தார்களென்வறியலாம். (செ.இ.யா. ச.பக் 47-48) எனவே மேலே சிங்கையாரிய குடும்பத்தினர் சிதம்பரதானம் பண்ணியது 11ஆம் நூற்றாண்டு நிகழ்ச்சி புகழேந்திப்புலவரை யாதரித்தது.

அக்குடும்பத்தவரின் 12ஆம் நூற்றாண்டு நிகழ்ச்சி இவைகள் கலிங்கமாகன் வரமுந்தி நிகழ்ந்த நிகழ்ச்சி. அப்படி இருக்கக் கலிங்கமாகன்தான் தலைநகர் கட்டினான் என்பது பிளையல்லவா? நிற்க.

இன்னும் தெளிவான விளக்கம் என்னையெனின் பிறர் 870 என்ற அந்த எண்ணைத்தான் வியாக்கியான் வேறுபாட்டால் 1170 ஆக்கிக் கலிங்கமாகனுக்குக் கொண்டு போகிறார். அப்படி 1170 ஆக்கியவழி பிழை என்று சொல்லவே அந்தப்பிழையான எண்ணமில்லை. அந்த எண்ணிலே ஆண்டிலே வந்த கலிங்கமாகனுமில்லை என்க.

(தொடரும்)

# கோபி அனானை வடக்கிற்கு வரவிடாது அரசாங்கமே இழுத்தடிப்புச் செய்கிறது

## தளபதி கேணல் சூசை தெரிவிப்பு

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் கோபிஅனானை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வர விடாமல் அரசாங்கமே இழுத்தடிப்பு செய்து வருவதாக கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

அவர் இங்கு வருவார் என நாம் மட்டுமல்ல, எமது மக்களும் மிகுந்த ஆர்வத்துடனேயே காத்திருந்தார்கள். கோபி அனானை இங்கு வந்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடாமல் கொண்டு செல்கின்ற அளவுக்கு அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்தமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமே என நேற்று முன் தினம் பி.பி.சி.தமிழோசைக்குத் தெரிவித்தார்.

உலக நாடுகளைப் பொறுத்த வரையில் இலங்கையில் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே சில உதவிகள் வழங்கப்படும் என ஏற்கனவே அறிவித்திருந்தன.


சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் அரசு போர்க் கொடியைப் போர்த்திக்கொண்டிருந்தபடியால் தான் உதவிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனால், திடீரென ஏற்பட்ட இந்த இயற்கை அனர்த்தத்தின் காரணமாக பல உலக நாடுகள் இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்ட தற்கமைய மனிதாபிமான ரீதியாக பெருமளவு நிதியினை அனுப்பி வைத்துள்ளன.

ஆனால் இந்த அரசாங்கம் வடக்கு-கிழக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றதே தவிர மாறாக எமது பகுதிகளுக்கு அனுப்பவில்லை என்றும் சூசை தெரிவித்தார். (த)



யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தினரால் நடாத்தப்பட்ட சுயதொழில் ஊக்குவிப்பு தையல் பயிற்சியில் சித்தியடைந்து சான்றிதழ் வழங்கப்பட்ட யுவதிகளுடன் ஆசி ரியைகளைப் படத்தில் காணலாம்.



கொடிகாமம் பிரதேசசபை மண்ட'த்தில் கடந்த மாதம் நடைபெற்ற செம்மனச் செம்மல் அமரர் எம்.ஜி.ஆரின் 17ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வில், கொடிகாமம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இரத்தினம் உரையாற்றுவதைப் படத்தில் காண்க.

(படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)




சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், யு.என்.எச்.சி.ஆர்., போரூட் மற்றும் கியூடெக், மனித உரிமை ஆணைக்குழு ஆகிய இணைந்து பிரதேச செயலர் பிரிவு தோறும் விழிப்புணர்வு மற்றும் கொடி வாரத்தை சிறப்பாக முன்னெடுத்தன.
அவ்வாறு நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ் வொன்றில் சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் கருத்துரை வழங்குவதைப் படத்தில் காண்க.

# பேரலையால் அழிந்த கிராமங்களை புனரமைக்கு முன் போரலையால் இழந்த கிராமங்களை மீட்டுத் தருக!

## மறவன்புலோ பாரதி சனசமூக நிலையம் ஜனாதிபதிக்கு மகஜர்

'சுனாமி பேரலையால் அழிந்த கிராமங்களைப் புனரமைக்க முன், கொடிய போரலையால் நாம் இழந்த கிராமங்களை எம்மிடம் தாருங்கள். போரினால் இடம்பெயர்ந்த மறவனபுலோ, தனங்கிளப்பு, கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் மக்களை மீளவும் குடியமர வழி விடுங்கள்' இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு சாவகச்சேரி மறவன்புலோ பாரதி சனசமூக நிலையத்தினர் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்நிலையத்தின் சார்பில் அதன் தலைவர் அனுப்பிவைத்துள்ள மகஜரில்,

சுனாமி அலையால் அனைத்து சமூகமும் ஒன்றுபட்டுச் செயற்படும் இவ்வேளை போரினால் சொத்து சுகங்கள் யாவற்றையும் இழந்த இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 580 குடும்பங்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியேற விடுமாறும், தமது சொந்த மண்ணில் இனியாவது நிம்மதியாக வாழ வழிவிடுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இம்மகஜர் கடந்த முதலாம் திகதி மேற்படி நிலையத்தினரால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைகப்பட்டது. இம்மகஜரின் பிரதிகள், தமிழீழ விழுதலைப்புலிகளின் தலைவா வே.பிரபாகரன் மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ந-7)

# மருந்துப் பொருட்கள் கையளிப்பு

இலங்கை திருச்சபைக்கான சிறுவர் நலன் சங்கம் மெதடிஸ் திருச்சபை, பருத்தித்துறை கட்டைவேலி திருச்சபை ஊடாக சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கபபட்டவர்களுக்கு ஒரு தொகுதி மருந்துப் பொருட்களை வழங்கியுள்ளது.

சுனாமி அனர்த்த புனர்வாழ்வு கூட்டு செயலணி கருமபீடத்தில் அமைந்துள்ள சுகாதார சேவைகள் அலுவலக ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சொலமனிடம் நேற்றுக்காலை 12.00 மணிக்கு கட்டைவேலி திருச்சபை முகாமைக்குரு ஜே.டேவித் அழகராஜாவும் உதவிக்குரு பி.ஏ. சதஸும் மருந்துப்பொருட்களைக் கையளித்தனர். (க-101)

# மேலும் 2000 அமெ.படையினர் கொழும்பை வந்தடைந்தனர்

(கொழும்பு)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவென அமெரிக்காவின் "மரைன்" கடற்படையினர் 2 ஆயிரம் பேர் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட இவர்கள் துரிதமாக அனுபபி வைக்கப்படவுள்ளனர்.

இவர்கள் இலங்கை விமானப் படையினருடன் இணைந்து நிவாரணப் பணிகளில ஈடுபடவுள்ளனர்.

அதேவேளை, கியூபாவின் நிவாரணக் குழுவினரும் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தனர். இவர்களை கட்டுநாயக்க விமானநிலையத்தில சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வரவேற்றார்.(த-8)

# அனான் வடக்குக்கு வருவதை அரசு தடுக்க முயற்சிப்பது ஏன்?

## ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்கிறார் கிஷோர் எம்.பி

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் வடக்குக்கு விஜயம் செய்யாதமை குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கடும் விசனம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் செயலாளரை வடக்குக்கு அழைத்துவருவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்ட தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் இதுகுறித்துத் தெரிவித்ததாவது,

ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் இலங்கையில் சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக வந்திருக்கின்றார்.

ஆனால் அவருடைய வருகை எங்களுக்கு திருப்திகரமாகவில்லை. காரணம், அவர் இப்போது ஐக்கிய நாடுகளின் செயலாளர் என்ற முறையில் வடக்கிற்கும் விஜயம் செய்ய வேண்டும்.

ஆனால் அவருடைய பயணம் தெறகிற்கும், கிழக்கிற்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிந்திருக்கின்றோம்.

நான் நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பரிஸ் ஆகியோருடன் தொடர்பு கொண்டு கோபி அனான் வடக்கிற்கு வரவேண்டும் என்று விடுதலைப்புலிகளும் மக்களும் ஆவலுடன் கேட்டிருக்கின்றார்கள் என்று கூறியிருந்தேன்.

அதற்கு அவர்கள் ஜனாதிபதி தான் இதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் எனறு கூறினார்கள்.

இலங்கை இரண்டு நாடாக இருக்கினறது. ஒன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடு. அடுத்து அரசாங்கத்தின் கட்டுப்பாடாக இருக்கின்றது என்பதை கோபி அனான் விளங்கிகொள்ள வேண்டும்.

அத்துடன் இயற்கை அனர்த்தத்தால் வடக்கு - கிழக்கு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு பல இறப்புக்களையும் சந்தித்து இருக்கிறது.

எனவே இரு பிரதேசங்களுக்கும் கோபி அனான் சென்று நிலைமைகளைப் பார்க்கவேண்டும்.

இதனைவிடுத்து அவர் அரசாங்கம் சொல்வதைக் கேட்பவராக இருந்தால் அது அவருடைய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பதவிக்கு நல்லதில்லை என்றுதான் கூறவேண்டும்.

வடக்கு-கிழக்கில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனான் செல்வதை அரசாங்கம் தடுக்குமானால் அரசாங்கத்திடம் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்றுதான் கூறவேண்டும். அத்துடன் அந்த உள்நோக்கம் எனன என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள செயலாளர் என்ற முறையிலே அவரை எவரும் கட்டுப்படுத்தமுடியாது. அவர் சுதந்திரமான மனிதன். அவர் வந்து இந்த அழிவுகளைப் பார்த்து எங்களுடைய மக்கள் படுகின்ற கஷரங்களைப் பார்த்து அறிய வேண்டும் என்று விரும்புகின்றோம்.

ஆகையினால் வடக்குப் பகுதிக்கும் அவர் கட்டாயம் விஜயம் செய்யவேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்றார். (க- 9)

# நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கை ஜனாதிபதியின் பூரண கட்டுப்பாட்டின் கீழ்!

இலங்கையைத் தாக்கிய ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட பேரழிவுகளில் இருந்து இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கையினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் ஜனாதபதி இந்த முடிவினை எடுத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஆழிபபேரலையில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணங்கள் உரியமுறையில பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் விதமாகத் தேசிய நடவடிக்கை மையத்தின் ஊடாக அனைத்து நிவாரணப் பணிகளும் முன்னெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தோனேஷியாவில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் உலகநாடுகள் இலங்கைக்கு வழங்க உறுதியளித்துள்ள பல மில்லியன் டொலர் நிதியில் மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்கும்விதமாகவும், இநத நிதியுதவி துஷ்பிரயோகம் செய்யப்படாமல் பாதுகாக்கும் நோககிலுமே ஜனாதிபதி இந்த நடவடிக்கையினை எடுத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தாரா டி மெல் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் நடவடிக்கை செயலணியின் ஊடாகவே அனைத்துத் தரப்பினரும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியும் எனறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

# பிரிட்டனில் அகதிகளாகத் தஞ்சமடைந்தோருக்கு குடியுரிமை வழங்க உடன் நடவடிக்கை எடுக்குக!

## மட்டு. சென்ற பிரி. தூதுவர், பிரி. அபிவிருத்தி அமைச்சரிடம் ஜோசப் எம்.பி கோரிக்கை

(மட்டக்களப்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிககபபட்ட மட்டக்களப்பு பிரதேசத்தை இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஸ்ரீபன், பிரிட்டன் அபிவிருத்தி அமைச்சர் கிளாறிபென் ஆகியோர் நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டுள்ளனர்.

பின்னர் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இக்கூட்டத்தில் மட்டு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், கனகசபை மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த இருபது வருடமாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் யுத்தம் இடம்பெற்று வருவதினால் இப்பகுதிகள் பல அழிவடைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் பிரிட்டனில தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்களில் பலருக்கு வீசா வழங்கப்படாமல் நாட்டைவிட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது வடக்குக் கிழக்கு நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு உடனடியாகக் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

தான் நாடு திரும்பியதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு இதனைக் கொண்டுவருவதாகப் பிரிட்டனின் அபிவிருத்தி அமைச்சர் உறுதி கூறினார். (ந-8)

# வெளிநாடுகள் கடன்களுக்கு விடுப்பு வழங்கினால் பட்ஜெட்டில் 500 மில்லியன் டொலர் மீதமாகும்

## நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மீளச் செலுத்த வேண்டிய கடன்களுக்கு விடுப்பு வழங்குவதறகு வெளிநாடுகள் முடிவு எடுத்தால் அந்தக் கடன்களைச் செலுத்துவுதற்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து 500 மில்லியன் டொலர் மீதமாகுமென நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

உலக வங்கித் தலைவருடனான சந்திப்பின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கியுள்ள கடன்களுக்கு விடுப்பு வழங்க எடுத்துள்ள முடிவு தொடர்பாக உலக வங்கித் தலைவருடனான சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

எமது அபிவிருத்திச் செயற்திட்டத்துககு விசேடமாக சுனாமி அனர்த்தத்துக்கு உள்ளான தேசங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மீள் புனரமைப்பதற்கும் வரவு-செலவு திட்டத்தில் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தாது அனர்த்த நிதியாக சர்வதேச சமூகத்தினரால் வழங்கப்பட்டுள்ள நிதியையே இதற்குப் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

அதேவேளை, கடன்விடுப்பு வழங்குமாறு அதிக நாடுகளிடம் கேட்டுள்ளோம். ஜப்பான், சீனா, கனடா போன்ற நாடுகள் எமது கோரிக்கைக்குச் செவிசாய்த்துள்ளன. ஏனைய நாடுகள் இந்த நிலைப்பாடடுக்கு வரத் தயாராக உள்ளன.

அவ்வாறான நிலையேற்பட்டால் வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து 500 அமெரிக்க மில்லியனை மீதப்படுத்திக்கொள்ளலாம.

எனவே சுனாமியால் பாதிககப்பட்ட நகரங்களுக்கு இந்த நிதியைப் பயன்படுத்தலாம் என்றும் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார். (ந-8)

# மதிப்பீட்டுப் பணிகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

உலகவங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மதிப்பீட்டுப் பணிகள் இன்று கொழும்பில் ஆரம்பிக்கவுள்ளன.

இந்த மதீப்பீட்டுப் பணிகளின படி இதற்குத் தேவைப்படுகின்ற நிதியுதவிகளை உலகவங்கி வழங்கும். (ந-4)



அண்மையில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஒளிவிழாவில் கல்லூரி அதிபர் க. இராசதுரை, கிறிஸ்தவ மன்றப் பொறுப்பாசிரியர் செல்வி.ப.யூகி கிறிஸ்ரின் ஆகியோருடன் பிரதம விருந்தினர் வண.பிதா எஸ்.எ.றொசான் அடிகளார், சிறப்பு விருந்தினர் வண.பிதா கருணசேகரா அடிகள், கல்லூரி பழைய மாணவன் குலநாயகம் ஆகியோர் இறைவணக்கம் செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?



## தனுசு

அளவான உயரமும், அதிகார தோரணை தூய்மையின் தோற்றம், தெளிவான மனோ நிலையும் உடையவர்கள். இவர்களின் நடை, உடை பாவனைகள் மற்றவர்களிடமிருந்து இவர்களை வித்தியாசப்படுத்துவதாகவே அமையப் பெற்றவர்கள். நிதானமாக செயல்பட்டு பிறரின் ஆலோசனைகளையும் ஏற்று சகல காரியங்களையும் சாதிக்கக் கூடியவர்கள்.

சனிபகவான் வருட ஆரம்பம் முதல் 25.06.2005 முடிய உங்கள் ராசிக்கு ஏழாமிடத்திலேயே சஞ்சரிக்க உள்ளார். இதனால் கணவன் மனைவி இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். சிலர் பிரிந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம் வரலாம். தேவையற்ற வம்பு வழக்குகள் ஏற்படும்.

சனிபகவான் 26.06.2005 முதல் உங்கள் ராசிக்கு எட்டாமிடத்தில் அஷ்டமச் சனியாகச் சஞ்சரிக்கவுள்ளார். இதனால் அனாவசியச் செலவுகள் அதிகரிக்கும். கணவன் மனைவி இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வீண் விவகாரங்கள் வந்து சேரும்.

### ஜனவரி

குடும்பம் :குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். சொநத பந்தங்கள் ஆதரவு காட்டுவார்கள். சுபகாரியங்கள் நடக்கும் வாய்ப்பு உண்டாகும். நல்ல பல நணபர்களின் நட்புறவு கிடைக்கும். பொருளாதாரம்: காசு மேல் காசு வந்து சேரும் நேரமிது. கஷ்டங்கள் மறைந்து சுகம் உண்டாகும். சேரும் பணத்தை ஸ்திர சொத்துக்களில் முதலீடு செய்வீர்கள். வீடு வாகன சௌகரியங்கள் ஏற்படும். ஆரோக்கியம் : திடமாக இருக்கும். கல்லைத் தின்றாலும் செரித்துப் போகும். தொழில் வியாபாரம் : இருப்பு வைத்துள்ள சரக்குகள் இரட்டிப்பாக விலையேறி நல்ல இலாபத்தைத் தரும். புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி தொழிலை அபிவிருத்தி செய்யலாம். பெணகள் : மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். நீண்ட நாள் கனவுகள் நிறைவேறும். மாணவர்கள் ஏற்றம் பெறுவர்.

சாதகமானதிகதிகள் :2,3,9,13,20,21,23,25,28,30.

### பெப்ரவரி

குடும்பம் :குடும்ப நிர்வாகம் சீராக இருக்கும். எதையும் கணக்குப் போட்டுச் செய்வீர்கள். மனைவி, மக்கள் நலம் பெறுவார்கள். உடன் பிறந்தவர்களின் உறுதுணையும் உண்டு. பொருளாதாரம்: பல வகையிலும் வருமானம் வரும். வரவேண்டிய பாக்கள் சரியான சமயத்தில் வந்து சேரும். உயில் மூலம் சொத்து சேரும். ஆரோக்கியம்: நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம் : உங்களது சாதுரியத்தைப் பயன்படுத்தித் தொழில் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும். பணியாட்களன் கடினமான உழைப்பால் பண வருவாய் இரட்டிப்பாகும். சிறிய கடன் அமைப்பில் பெரிய முதலடுகளைப் பெற்று தொழிலில் போட முடியும். பெண்கள்: பிள்ளைகள் பெயரில் சொத்து வாங்குதல் அல்லது வங்கி வைப்பு நிதி ஏற்படுத்துதல் ஆகியவற்றைச் செய்வீர்கள். குடும்பம் முன்னேறப் பாடுபடுவீர்கள்.

சாதகமான தககதிகள்:5,6,10, 16,17,20,22,26,27,28.

### மார்ச்

குடும்பம்: தாம்பத்தியத்தில் எந்த வகையிலும் குறை சொல்ல முடியாது. மூதாதையர்களின் நல்லாசியுடன் சில காரியங்களைக் குடும்பத்தில் செய்து குறைகளை நீக்கி சந்தோஷத்தைப் பெறுவீர்கள். பொருளாதாரம் : பல வழிகளிலும் வருமானம் வரும் அதை ஒரே இடத்தில் தேக்கி வைக்காமல் வெவ்வேறு வழிகளில் முதலீடு செய்து கொள்வதால் அவை அபிவிருத்தியடையும். ஆரோககியம் : நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம்: இரவு பகல் பாராது பாடுபட்டு தொழில் வியாபாரத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவீர்கள். கூட்டுத் தொழில் மேன்மையடையும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்கும். பெண்கள்: திறமையாக எதையும் செய்து சாதனையாளர் வரிசையில் இடம் பிடிப்பீர்கள். மாணவர்கள்: விலங்கியல் துறையினர் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

சாதகமான திகதிகள் :5,9,10,16,17,19,25,26,28.

### ஏப்ரல்

குடும்பம்: கட்டுச் செட்டாகக் குடும்பம் நடத்துவீர்கள். பங்காளிகள் பக்கபலமாக இருப்பார்கள். பிள்ளைகளின் அபிலாஷைகள் பூர்த்தியாகும். தெய்வீகப் பணிகள் செய்யவும் வாய்ப்பு உண்டு. பொருளாதாரம்: பணப்புழக்கம் சரளமாகும். கொடுக்கல் வாஙகலில் தாராளம் காணப்படும். பிறருடைய பணம் சொத்து முதலியவற்றை அனுபவிக்கும் வாய்ப்பு உண்டாகும். வராக்கடன்கள் எளிதில் வசூலாகும். ஆரோக்கியம்: நல்ல நிலையில் இருக்கும். தொழில்வியாபாரம்: பல நல்ல சந்தர்ப்பங்கள் உருவாகும். அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தினால் நீங்கள் இருக்கும் இடமே வேறு. புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கவும் வாயப்பு உண்டு. பெண்கள்: மகிழ்ச்சியடைவார்கள். குடும்பத்தினர் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். திருமணமாகாத இளம் வயதினர்க்குத் திருமண வாய்ப்பு வந்து சேரும். மாணவர்கள: கால்நடை மருத்துவத் துறையினர் ஏற்றம் பெறுவர்.

சாதகமான திகதிகள் :1,5,6,12,14,16,19,20,22,24,25.

### மே

குடும்பம் :மகிழ்ச்சிகரமாக நடக்கும். பெரியவர்களால் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகள் உங்கள் பேச்சை மதித்து நடப்பார்கள். அவர்களது கல்வி, வேலைவாய்ப்பு முதலியவை அனுகூலமாகும். பொருளாதாரம் : பணவரவு அதிகரிக்கும். பிறருடைய வீழ்ச்சியில் உங்களுக்குப் பெருத்த இலாபம் கிட்டும். எந்த வகையிலாவது பணத்தைப் போட்டு பல மடங்கு சம்பாதித்து விடுவீர்கள். ஆரோககியம்: திருப்திகரமாக இருக்கும். தொழில் வியாபாரம்: எதிர்பாராத சில சூழ்நிலைகளால் உங்களது தொழில் வியாபாரம் உச்சநிலையை எட்டும. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டியது தானே. அரசாங்க வழிச் சலுகைகளும் எளிதல் கிடடும். பெண்கள்: சமுதாயப் பணிகள் உயர்வடையும். குழந்தைகளுடன் உல்லாசப் பயணம் செல்லும் வாய்ப்பு உண்டாகும். மாணவர்கள்: கால்நடை மருத்துவத்துறை மாணவர்கள் ஏற் றம் காண்பார்கள்.

சாதகமான திகதிகள் : 3,10,11, 12,18, 20,21,22,26,30.

### ஜுன்

குடும்பம் :கணவன், மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்வி, வேலை வாய்ப்பு, தொழில் முதலியவை முன்னேற்றம் காணும். அவர்கள் வழி காரியங்கள் நடைபெற வாய்ப்பு உண்டு. பொருளாதாரம்: நல்ல நிலையில் வருமானம் உண்டாகும். உங்களுக்கு எந்த வழியில் பணம் கிடைத்தாலும் எதையாவது பெருக்கிக் கொண்டுதான் இருப்பர்கள். பெண்கள் மூலமும் ப்ணவரவு உண்டு. ஆரோக்கியம் : கோளாறு ஏற்பட வாய்ப்பில்லை. தொழில் வியாபாரம் : வாடிக்கையாளர்களிடம் உங்கள் நிறுவனத்தின் நற்பெயர் அதிகரிக்கும். அவர்களது ஏகோபித்த ஆதரவால் விற்பனை பன்மடங்கு பெருகும். புதிய ஒப்பந்தங்களும், ஓடர்களும் அதிகமாகும். பெண்கள் : குடும்பத்தினர் உங்கள சொல் கேட்டு நடப்பார்கள். பதவியிலிருப்போர் பல்வேறு சலுகைகளை அடைவார்கள்.

சாதகமான திகதிகள்: 6,7,15,16,22,23,26,27.

### ஜுலை

குடும்பம் : பிள்ளைகள் விஷயத்தில் கொஞ்சம் கண்டிப்புடன் இருங்கள். பெரியவர்களின் உடல் நலனில் அக்கறை செலுத்துங்கள். அவர்களது ஆலோசனைகளை அலட்சியப்படுத்தாதீர்கள். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பொருளாதாரம்: வரவும் வந்து கொண்டிருக்கும். அதே சமயம் செலவும் ஆகிக் கொண்டிருக்கும். பூமி, மனை, வீடு வாங்குவதற்கும் வேறு பெரிய பட்டியல்கள் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் இந்த மாதம் சுமாரானதாகவே இருக்கும். ஆரோக்கியம் : சிறு சுகவீனம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம்: தொழில் போட்டியாளர்களால் சில சவால்களைச் சந்திக்க நேரும். பொறுமையும் தீவிர முயற்சியும உழைப்பும் இருந்தால் அவற்றை முறியடித்து வெற்ற காணலாம். பெண்கள்: தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில விட்டுக் கொடுத்து நடக்க முயற்சி செய்யுங்கள். மாணவர்: மருத்துவத்துறையினர் ஏற்றம் பெறுவர்.

சாதகமான திகதிகள் : 3,4,6,13,14,15,24,30,31.

### ஆகஸ்ட்

குடும்பம் : கணவன், மனைவி ஒற்றுமை சுமாராக இருக்கும். குடும்பத்தில் அன்னியரின் தலையீட்டை அனுமதிக்காதீர்கள். அவர்கள் சில குழப்பங்களை ஏற்படுத்தி விடுவார்கள். பெரியவர்களின் ஆலோசனைகளை அலட்சியப்படுத்த வேண்டாம். பொருளாதாரம் : முடிந்தவரையிலும் அனாவசியச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். பட்டியல் போட்டு சிக்கனமாகச் செலவழியுங்கள். வராக் கடன்கள் இந்த மாதத்தில் வசூலாவது சிரமம். ஆரோக்கியம் : பெரிய மாறுதல் ஏதுவும் இருக்காது. தொழில் வியாபாரம் : இது வளர்சசிக்கான திட்டங்களைத் தீட்டும் மாதமென்று சொல்லலாம். நவீன உபகரணங்களை வாஙகுதல், புதுமையான மக்களைக் கவரக் கூடிய திட்டங்களை அறிமுகப்படுத்துதல் என்று அமர்க்களப் படுத்துவீர்கள். இதன் எதிரொலியாக அடுத்து வரும் மாதங்களில் முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் : அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் :பொறியியல் துறை மாணவர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

சாதகமான திகதிகள்:1,2,3,4,5,10,12,16,20,21,29,30.

### செப்டம்பர்

குடும்பம் : கணவன், மனைவிக்குள் ஒற்றுமை நிலவும். ஒருவரையொருவர் மிஞ்சக் கூடிய அளவிற்கு அபாரமான யோசனைகள். குடும்ப சம்பந்தமான விஷயங்களில் முடிவெடுத்தல் எல்லாம் நல்ல விதமாக நடக்கும். பொருளாதாரம்: பணப்புழக்கம் தாராளமாகும். பிறர் விட்டுச் சென்ற பொன் பொருட்கள் மூலம் நல்ல வருமானம் உண்டாகும். உங்களுக்குத் தேவையான சௌகரியங்களைச் செய்து கொள்ள இந்த மாதம் உகந்ததாகும். ஆரோக்கியம்: தலைவலி முதலியவை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம்: அரசாங்கத்திடமிருந்து கடைக்கவேண்டிய லைசன்ஸ் முதலியவை கிடைகக்கும். புதிய ஓடர் கள் கிடைக்கவும் வாய்ப்பு உணடு. பெண்கள்: இளம் வயதினருக்குத் திருமண முயற்சிகள தாமதமாக நிறைவேறும். பிள்ளைகள சம்பநதப்பட்ட எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். மாணவர்கள் : வங்கியியல், வேதபாடம், மதபோதனை, சட்டம் ஆகிய துறையினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

சாதகமான திகதிகள் : 5,6,12,13,17,23,24,25,26.

### அக்டோபர்

குடும்பம் : குடும்பத்தில் ஒற்றுமையும் கோலாகலமும் இருக்கும். பெரியவர்களின் எண்ணங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். தெய்வீக சம்பந்தமான சில நேர்த்திக் கடன்களை முடிப்பீர்கள். பொருளாதாரம்: கொடுக்கல், வாங்கல் சரளமாகும். பணபபழக்கம் தாராளமாகும். வரவேண்டிய பாக்கிகள் எளிதில் வசூலாகும். பணத்தை பூமி, தொழில் முதலியவற்றில் முதலீடு செய்யலாம். ஆரோக்கியம்: நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம்:அபிவிருத்தி அடையும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். பிரயாணத்தால் புதிய ஓடர் கிடைக்கும். இலாபம் அதிகரிக்கும். பெண்கள் : புதிய நகைகள் வாங்கி மகிழலரம். திருமணமாகாத இளம் வயதினர்க்குத் திருமண முயற்சிகள் வெற்றிபெறும். மாணவர்கள்: பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் தீவிரகவனம் செலுத்தவேண்டும்.

சாதகமான திகதிகள் 3,10,14,20,15,21,22,23,25,30.

### நவம்பர்

குடும்பம் கணவன், மனைவி ஒற்றுமைக்குப் பங்கம் வராது. குடுமபத்தினரின் தேவைகளைச் சமயம் அறிந்து நிறைவேற்றி வைப்பீர்கள். அவர்களின் பூரண ஒத்துழைப்பு உங்களுக்கு கிட்டும். பொருளாதாம் : ஏலச் சீட்டு வகைகள், குலுக்கல சீட்டுகள், முதலியவற்றில் எதிர்பாராத பணவரவு உண்டு. கொடுக்கல், வாங்கலில் நல்ல அபிவிருத்தி உண்டாகும். ஆரோக்கியம்: முன்னேற்றமான நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம்: புதிய முதலீடுகளைச் செய்வதற்கும் புதிய தொழில்கள்கிளை நிறுவனங்களைத் தொடக்குவதற்கும் உரிய வாய்ப்புகள் வந்தடையும். உங்கள் தொழிலுக்கு எதிர்பார்த்த அரசாங்க சலுகைகள், வங்கிக் கடன்கள முதலியவை கிடைக்கும். பெண்கள்: தொழில சார்ந்த எதிர்காலத் திட்டங்கள் நிறைவேறும். மாணவர்கள் :கணிதம், கலை, வணிகவியல், இலக்கயம், மொழியியல், இதழியல், ஜோதிடவியல், பொருளாதாரத் துறையினர் ஏற்றம் பெறுவ்ர்.

சாதகமான திகதிகள் : 1,2,6,10,11,16,18,19,21,26,27.

### டிசம்பர்

குடுமபம்: கணவன், மனைவி உறவு சீர்படும். குடும்பத்தினர் உங்கள் மனநிலையை புரிந்து நடப்பார்கள். பெரியவர்களின் ஆதரவும் உண்டாகும். பொருளாதாரம்: பண வரவில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வருமானம் சுமாராக இருந்தாலும் பழைய கடன்களை ஓரளவு அடைக்கலாம். ஆரோககியம் : செரிமானக் கோளாறு ஏற்பட இடமுண்டு. தொழில் வியாபாரம் : சில பெரிய மனிதர்களின் உதவியால் தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். பெண்கள்: நீண்ட நாடகளாகத் திட்டமிட்டு வந்த சில காரியங்கள் தற்சமயம் நிறைவேறக் கூடிய வாய்ப்பு உண்டாகும். மாணவர்கள் : உளவியல் துறையினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

சாதகமான தகதகள்:1,4,7,6,8,14,15,17,20,23,30,31.


(தொடரும் ....)

# தெற்காசியாவில் சுனாமியும் வல்லரசுகளின் ஊடுருவலும்



சுனாமியால் தாக்கப்பட்ட நாடுகளுக்கு நிதியுதவி என்ற பெயரில் தெற்காசியாவில் தங்களது ஆளுமை மற்றும் அரசியல் அதிகாரத்தை நிலை நாட்டுவதில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் நடந்த




மறுதினம் அமெரிக்கா அறிவித்த நிதியுதவி எவ்வளவு தெரியுமா?. வெறும் 15 மில்லியன் டொலர்.

ஆனால், தெற்காசியாவின் கடலோரப் பகுதிகள் கடலில் கரைந்து போய்விட்டதை, ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிபோய்விட்டதை சிஎன்என், பிபிசி உள்ளிட்ட தொலைக் காட்சிகள் தொடர்ந்து ஒளிபரப்ப ஆரம்பிக்க, நிலைமையின் விபரீதம் புரிந்து அமெரிக்கர்கள் அதிர, மக்களின் மன ஓட்டத்தை உணர்ந்த அமெரிக்க அரசு தனது உதவி நிதியை 35 மில்லியனாக உயர்த்தியது.

## அமெரிக்காவின் உள்நோக்கம்

தெற்காசியாவில் ஏற்பட்ட இந்த பேரழிவைக் காரணமாக வைத்து இந்தப் பகுதியில் ஊடுருவிட ஆர்வம் காட்டும் அமெரிக்கா தனது உதவி நிதியை ஐ.நாவிடம் தராமல் போட்டியாக ஜப்பான்,



அவுஸ்திரேலியா எனத் தனது கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டு சுனாமி நிவாரணத்துக்கு தனி அமைப்பை ஏற்படுத்தியது.

அதில் தெற்காசியாவின் சூப்பர் பவர் என்று கொம்பு சீவிவிடப்பட்ட இந்தியாவையும் சேர்த்துக் கொண்டது. முதலில் யோசிக்காமல் இதில் சேர தலையாட்டி விட்ட இந்தியா பின்னர் அமெரிக்காவின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு மெதுவாக பின் வாங்க ஆரம்பித்தது.

இதற்கிடையே சுனாமியால் பல முறை பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு ஜப்பான் 500 மில்லியன் டொலர்கள் அளிப்பதாக அறிவிக்க, சீனாவும் 40 மில்லியன் டொலர் உதவியை அறிவிக்க, இதையடுத்து அமெரிக்கா தனது உதவியை 350 மில்லியன் டொலராக அதிகரித்தது.

அல்-கொய்டா மற்றும் தலிபான்களுடன் சண்டை போட பாகிஸ்தானுக்கு கடந்த 2 ஆண்டுகளில் அமெரிக்கா வழங்கியுள்ள நிதி 1.6 பில்லியன் டொலர்களைத் தாண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், 1.5 இலட்சம் மக்கள் பலியான, சுமார் 20 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்ட பேரழிவுக்கு அமெரிக்கா அளித்துள்ள உதவி வெறும் 350 மில்லியன் டொலர் தான். தெற்காசியாவுக்குள் நிரந்தர கூடாரம் போட தனக்கு உதவினால் மட்டுமே கூடுதல் நிதி வழங்கப்படும் என்பதை சொல்லாமல் சொல்கிறது அமெரிக்கா.

## ஜேர்மனியும் களத்தில் குதிப்பு

அமெரிக்காவின் இந்த நோக்கத்தை உணர்ந்து கொண்ட ஜேர்மனி படாரென களத்தில் குதித்துள்ளது. நிதியுதவிக்காக எந்த நாடும் அமெரிக்காவுக்கு கதவைத் திறந்து விட்டு விடக் கூடாது என்பதில் கவனமாக உள்ள ஜேர்மனி பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு 674 மில்லியன் டொலரை உதவித் தொகையாக வழங்குவதாக ஐ.நாவிடம் தெரிவித்துள்ளது.

இது ஜப்பான் அறிவித்த 500 மில்லியன் டொலர்களை விட 174 மில்லியன் டொலர் அதிகம். மேலும் ஏராளமான நிவாரணப் பொருட்கள், ஏர் ஆம்புலன்ஸ்கள் என பல வகைப்பட்ட உதவிகளையும் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உடனடியாக அனுப்பி வைத்தது ஜேர்மனி.

இதைத் தொடர்ந்து பசிபிக் பகுதியில் தனது கடல் அதிகார எல்லைக்குள் வரும் தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய நாடுகளை திருப்திப்படுத்த வேண்டிய நிலைக்கு அவுஸ்திரேலியா தள்ளப்பட்டது.

இதனால் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறி சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு 1 பில்லியன் டொலர் உதவியை வழங்குவதாக அறிவித்துள்ளது அவுஸ்திரேலியா.

ஜேர்மனியின் வேகம் கண்டு திணறிய அமெரிகக அதிபர் புஷ உடனே முன்னாள் அதிபர்களான தனது தந்தை புஷ சீனியர் மற்றும் பில் கிளிண்டனை அழைத்துக் கொண்டு பாதிக்கபடட நாடுகளின் தூதரகங்களுக்கு ஒருரவுண்டு போய் வந்தார். வேண்டிய உதவிகளைச் செய்வோம் என்றதோடு இந்தியாவையும் பாராட்டித் தள்ளினார்.




அமெரிக்க நிதியுதவியை ஏற்றாலும் படை உதவிகளை பாதிக்கப்பட்ட நாடுகள் ஏற்கவில்லை. இதில் விதிவிலக்கு இலங்கை மட்டுமே. அமெரிக்கப் படையினரை நிவாரணப் பணிகளுக்காக உள்ளே அனுமதித்துள்ளது இலங்கை.


## இந்தியா உதவி

இது நடக்கும் என்று தெரிந்தது தான், சுனாமி தாக்கியவுடன் இலங்கைக்கு ரூ.100 கோடி உதவியையும் கூடவே இரண்டு போர்க் கப்பல்களில் மீட்பு உபகரணங்களையும், இராணுவ சரக்கு விமானங்களில் ஏராளமான நிவாரணப் பொருட்களையும் அனுப்பியது இந்தியா.

அமெரிக்கப் படைகள் இலங்கைக்குள் நுழைவதைத் தடுக்க இந்தியா எவ்வளவோ முயன்றது.



எல்லா உதவிகளும் செய்வதாக சந்திரிகாவிடம் பலமுறை தொலைபேசியில் பேசிய பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்தார். ஆனாலும் அமெரிக்கப் படைகளை இலங்கைக்குள் அனுமதித்துவிட்டார் சந்திரிகா.



இதையடுத்து அமெரிக்கா தலைமையிலான நிவாரண உதவிக்கான 4 நாடுகள் அமைப்பில் இருந்து இந்தியா வேகமாகவே பின் வாங்க ஆரம்பிக்க, இன்று அந்த அமைப்பே கலைக்கப்படுவதாக அறிவித்துவிட்டார அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல்.

## புத்திசாலி

இதற்கிடையே ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் வீடோ அதிகாரத்துடன் நிரந்தர இடம் பிடிக்கும் தீவிரத்தில் இருக்கும் இந்தியா, இந்தப் பேரழிவையடுத்து தனக்கு எந்த நாட்டின் உதவியும் தேவையில்லை என்று அறிவித்துவிட்டது.

பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராக விரும்பும் ஒரு நாடு இயற்கைப் பேரழிவைத் தானே சமாளித்துக் கொள்ள முடியாவிட்டால் எப்படி என்ற கேள்வி எழுந்துவிடக் கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வும், இந்தப் பேரழிவைக் காரணமாக வைத்து நிதியுதவி செய்துவிட்டு பின்னர் தன்னை எந்த நாடும் கட்டுப்படுத்த முயலக் கூடாது என்ற காரணத்தாலும் வெளிநாட்டு நிதியுதவிகளுக்கு கும்பிடு போட்டுவிட்டது இந்தியா.

மேலும் தான் பாதிப்புக்குள்ளாகி இருந்தாலும் தன்னால் பிற நாடுகளுக்கும் உதவிக் கரம் நீட்ட இராணுவ பலமும் பண வசதியும் இருக்கிறது என்பதை மாலத்தீவு, இலங்கை, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு இராணுவ கப்பல்களையும் இராணுவச் சரக்கு விமானங்களில் நிவாரணப் பொருட்களை அனுப்பி உதவி நிரூபித்துவிட்டது இந்தியா.

## வளைகுடா நாடுகளின் அசண்டையீனம்

இந்த பேரழிவு விஷயத்தில் வளைகுடா நாடுகள் நடந்து கொண்ட முறை தான் மிக மட்டமானது.

கறுப்புத் தங்கமான எண்ணெயில் மிதக்கும் இந்த நாடுகள் போதிய அளவில் சுனாமி பாதித்த நாடுகளுக்கு உதவ முன்வரவில்லை. சவுதிஅரேபிய மன்னர் ஆட்சியாளர்கள் பிசாத்து காசு உதவியை அறிவித்துள்ளனர்.



இந்த மன்னர் குடும்ப வாரிசுகள் சார்ட்டட் விமானங்களில் உலகின் முன்னணி ரிசார்ட்டுகளுக்குச் சென்று ஒரு வாரத்தில் தண்ணியடித்துச் செலவழிக்கும் நிதிதான் இது.

இன்னொரு முக்கிய விஷயத்தையும் நாம் மறந்திட முடியாது. ஈரானில் மாபெரும் பூகம்பம் ஏற்பட்டபோது பல நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு நிதியுதவியை அறிவித்தன. உறுதியளித்தபடி அந்த நாடுகள் பணம் கொடுத்திருந்தால் 1 பில்லியன் டொலர் வந்திருக்க வேண்டும். ஆனால், ஈரானுக்கு கையில் வந்து சேர்ந்தது வெறும் 17 மில்லியன் மட்டுமே.

இதே போலத்தான் இப்போது 100க்கும் அதிகமான நாடுகள் 4.5 பில்லியன் வரை சுனாமி பாதித்த நாடுகளுக்கு நிதியுதவியை அறிவித்திருக்கின்றன. இதில் உண்மையிலேயே எவ்வளவு உதவி போய்ச் சேரப் போகிறது என்று தெரியவில்லை.

(இணையத்தளத்திலிருந்து...)

# துயரம் தந்த 2004 நவம்பர்

01.11.2004 * இந்திய இராணுவத் தளபதி லெப்ரினன்ற் ஜெனரல் வின்ஸிவிச் இலங்கை வருகை.




* கிரிக்கெற் வீரர் முத்தையா முரளிதரன் யாழ்.வருகை.

02.11.2004 * முத்தையா முரளிதரன் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனுடன் சந்திப்பு.

03.11.2004 * ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியா பயணம்.



05.11.2004 * ஜனாதிபதி சந்திரிகா -சோனியாகாந்தி சந்திப்பு.

06.11.2004 * ஜனாதிபதி சந்திரிகா இந்திய ஜனாதிபதி அப்துல்கலாமுடன் சந்திப்பு.

08.11.2004 * எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வருகை.



09.11.2004 * அன்ரன் பாலசிங்கம் வன்னி வருகை. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பு.



10.11.2004 * தமிழீழ சட்டக்கல்லூரி திருமதி அடேல் பாலசிங்கத்தினால் கிளிநொச்சியில் திறந்துவைப்பு.

* நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இலங்கை வருகை.

* பீற்றர்சன் தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பு.



13.11.2004 * யாழ். சிறையிலிருந்து 19 கைதிகள் விடுதலை.

## வலம்புரி நினைவுக்குறிப்பு



*அன்ரன் பாலசிங்கம் எரிக் சொல்ஹெய்ம் கட்டுநாயக்க விமானநிலையத்தில் சந்திப்பு.

*எரிக் சொல்ஹெய்ம் புதுடில்லி பயணம்.

*அன்ரன் பாலசிங்கம் லண்டன் பயணம்.

18.11.2004 * பாராளுமன்றில் வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிப்பு.

17.11.2004 * அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆமிடேஜ் பதவிவிலகினார்.

* சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரொன் பியூறுஹொவ்டே சந்திப்பு.



19.11.2004 * வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் 2 இளைஞர்கள் சுட்டுக்கொலை.

* கொழும்பு மேல்நீதிமன்ற நீதிவான் சரத் அம்பேபிட்டிய சுட்டுக்கொலை.



20.11.2004 * வல்வெட்டித்துறைச் சம்பவத்தைக் கண்டித்து யாழ்.குடாநாட்டில் பூரண ஹர்த்தால்.

* இலங்கையில் மீண்டும் மரணதண்டனைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

21.11.2004 * பாகிஸ்தான் பிரதமர் சௌகாத் அஸிஸ் இலங்கை வருகை. ஜனாதிபதி சந்திரிகாவுடன் சந்திப்பு.

22.11.2004 * யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மணற்காடு விஜயம்.

23.11.2004 * ஜனாதிபதி சந்திரிகா ஈரான் பயணம்.



24.11.2004 * ஜனாதிபதி சந்திரிகா ஈரான் ஜனாதிபதி முகமத் கடாமியுடன் சந்திப்பு.

26.11.2004 *வவுனியாவில் புலிகள், இராணுவத்தினர் கண்காணிப்புக்குழுவினர் சந்திப்பு.

27.11.2004 *நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் மல்வத்த பீடாதிபதி சுமங்கலதேரருடன் சந்திப்பு.

28.11.2004 *ஈரானிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பினார்.





29.11.2004 *அவுஸ்திரேலிய அரச பிரதிநிதிகள் குழு யாழ்.வருகை.

*ஜயவர்த்தனபுர பல்கலைக்குழு யாழ்.விஜயம்.

*திருமலையில் தமிழரின் வீடுகள் தீக்கிரை. 20 குடும்பங்கள் இடம்பெயர்வு.

## உலக அரங்கில்



03.11.2004 *அமெரிக்காவ் ் தேர்தலில் புஷ் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு.

11.11.2004 *பலஸ்தீன இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் மரணம்.



*சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி காமகோடி பீடாதிபதி கைதுசெய்யப்பட்டார்.

12.11.2004 * பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவராக மகமூத் அப்பாஸ் நியமனம்.

20.11.2004 * ஜெயேந்திரரை விடுவிக்கக் கோரி தமிழ் நாட்டில் மனிதச் சங்கிலிப் போராட்டம்.

21.11.2004 * ஈராக்கின் பலூஜாவை அமெரிக்கா கைப் பற்றியது.

23.11.2004 * தீவிரவாதிகளின் மிரட்டல் காரணமாக இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதரகம் மூடப்பட்டது.

(தொடரும்...)

# காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல் இராணுவத்தினர் உட்பட 8பேர் பலி



காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் வருமான வரித்துறை அலுவலகக் கட்டடத்தில தீவிரவாதிகளுடன் இந்திய இராணுவம் நடத்திவரும் சண்டையில் சுட்டுக்கொல்லப்பட்ட இந்திய வீரரின் சடலம் அப்புறப்படுத்தப் படுவதைப் படத்தில் காணலாம்.

(ஸ்ரீநகர்)

காஷ்மீரிலுள்ள வருமான வரி அலுவலகத்தில் இரண்டாவது நாளாகவும் தீவிரவாதிகளின் தாக்குதல் இடம் பெற்றது.

இதில் இராணுவத் துணைத் தளபதி உட்பட பலியானவர்கள் எண்ணிக்கை 8ஆக உயர்ந்துள்ளது.

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் மத்திய பகுதியில் உள்ள வருமான வரி அலுவலகத்தில் கடந்த வெள்ளிககிழமை மாலை தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டுக்கொண்டும் அதிரடியாக உள்ளே நுழைந்தனர்.

தீவிரவாதிகள் குண்டுவீசியதில் வருமான வரித்துறை அலுவலகக் கட்டடமே தீப்பிடித்தது. தகவல் அறிந்ததும் இராணுவத்தினரும் தீயணைப்புத்துறையினரும் விரைந்து வந்தனர்.

தீயணைப்புத்துறையினர் ஒரு பக்கம் தீயை அணைக்க, தீவிரவாதிகளுககும் இராணுவத்தினருக்குமிடையே மறுபககம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஒரு இராணுவத் துணைத் தளபதி உடபட 3 இராணுவத்தினா பலியானார்கள். தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டில் 3 உயரதிகாரிகள் உட்பட வருமான வரித்துறையினர் 5பேர் படுகாயமடைந்தனர்.

கட்டடத்தில் பற்றிய தீ நேற்று முன்தினம் இரவே அணைக்கப்பட்டது. ஆனாலும் முக்கிய ஆவணங்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிட்டது. தீயணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் காலை அந்தக் கட்டடத்திற்குள் நுழைந்தனர்.

அப்போது கட்டடத்தின் உள்ளேயிருந்து சரமாரியாக வெடிகுண்டுகள் வீசப்பட்டன. துப்பாக்கியாலும் சுடப்பட்டது. இதில் ஒரு இராணுவ வீரா் பலியானார். 4பேர் படுகாயமடைந்தனர். அதைத்தொடர்ந்து இராணுவத்தினா் உஷாரானார்கள். கட்டடத்திற்குள் மேலுமஒரு தீவிரவாதியோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டவர்களோ இன்னும் இருப்பதைத் தெரிந்துகொண்டனர்.

ஏராளமான அறைகள் கொண்ட அந்தக் கட்டடத்தில் ஒவ்வொரு அறையாகத் தீவிரவாதியை இராணுவத்தினர் தேடினார்கள். அப்போது உள்ளேயிருந்து குண்டுவீசுவதும் துப்பாக்கியால சுடுவதும் நிறுத்தப்பட்டது. கட்டடத்தின் உள்ளே நேற்றுமுன்தினம் 2 தீவிரவாதிகள் பதுங்கியிருந்தனா். அவர்களை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். உள்ளே தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட வருமான வரித்துறை ஊழியர் ஒருவர் பிணமாகக் கிடந்தார். இம்மோதலின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்களின் எணணிக்கை மொத்தம் எட்டாக உயர்ந்துள்ளது. (ந)



வடசீனாவின் ஹார்பின் பகுதியில் உள்ள பூங்காவில் பனிவிழாவை முன்னிட்டு உறைபனியில் செதுக்கப்பட்டுள்ள பனிக்கட்டடம்.

# இத்தாலியில் ரயில் விபத்து 15 பேர் ஸ்தலத்தில் பலி



இத்தாலியில் பயணிகள் ரயிலும் சரக்கு ரயிலும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் 15பேர் பலியாகியுள்ளனர்.

இத்தாலியில் கடும் பனிமூட்டம் நிலவுகிறது. அதனால் போக்குவரத்தில் கடந்த சில நாட்களாக சிக்கலிருந்தது.

இந்நிலையில், இங்கு பயணிகள் ரயிலும், சரக்கு ரயிலும் கடந்த வெள்ளிககிழமை நேருக்குநேர் மோதிக்கொணடன. பனிமூடடமே இவவிபத்துக்குக் காரணம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்தில் 15பேர் சம்பவ இடத்திலேயே உடல நசுஙகி இறந்தனர். இடிபாடுகளில் சிக்கி இன்னும பலா் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. ஐம்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ரயில்கள் மோதியதில் ஒரு ரயிலின் எஞ்ஜின் தடம்புரண்டது. ரயில் பெட்டிகள் ஒன்றுடன் ஒனறு மோதி நொருங்கியுள்ளன.

கடந்த 25 ஆண்டுகளில் நடந்த மோசமான ரயில் விபத்து இதுதான் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ந)

## WORLD NEWS உலக தரிசனம்

# அந்தமானுக்கு இன்று இரவு காத்திருக்கும் புதிய ஆபத்து!

சுனாமிப் பீதியல் நடுஙகிககொண்டிருக்கும் அந்தமான, நிகோபார் தீவு மக்களுக்கு இன்று இரவு புதிய ஆபத்துக் காத்திருக்கிறது.


அந்தமான், நிகோபார் தீவுகளை சுனாமி அலைகள் ஆட்டிப்படைத்துவிட்டன. குறிப்பாக நிகோபார் தீவு சின்னாபின்னமாகிவிட்டது. ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலி. பொருட்சேதமும் ஏராளம். வீடு, உடமைகள் என்று எல்லாவற்றையும் இழந்த ஆயிரக்கணக்கான மக்கள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

பூகம்பம் அவர்களைத் தினமும் வந்து தாலாட்டிச் செல்கிறது. சுனாமி தாக்கிய டிசெம்பர் 26இல் இருந்து நேற்றுமுன்தினம் வரை அந்தமான், நிகோபார் தீவுகளில் 110முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 5முதல் 6.5 ரிக்டர் அளவில் அவைகள் இருந்தன. அவற்றின் தாலாட்டு மேலும் தொடரும் என்று பூகம்பவியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இத்தீவு மக்களுக்கு இன்று இரவு முதல் இரண்டு நாட்களுக்குப் புதிய ஆபத்துக் காத்திருக்கிறது. இன்று அமாவாசை. சுனாமிக்குப் பின் அந்தமான் கடல்மட்டம் 0.3 மீற்றர் உயர்ந்திருக்கிறது. கடல் சீற்றம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அமாவாசை தினமான இன்று முதல் புதன்கிழமை வரை கடல் அலைகள் அதிக உயரத்தில் எழும். இன்று இரவு 8 முதல் 10 மணிவரையும் நாளை இரவு 9முதல் 11மணிவரையும் அலைகள் அதிக உயரத்தில் எழக்கூடும் என்று வானிலை ஆராய்ச்சிமையம் எச்சரித்துள்ளது.

இதனால் இத்தீவுகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேசமயம் மக்கள் பீதியடையவேண்டாம் எனறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)



அந்தமானில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பில் கபபல் கட்டும் பகுதியிலிருந்த சிறிய கப்பலொனறு சாய்க்கப்பட்டுக் கிடக்கும் காட்சி.

# ஆமையிடம் ஆறுதல் தேடும் நீர்யானைக் குட்டி

(கென்யா)



கென்யாவின் கடலோரப் பகுதியில், சுனாமி அசுர அலைகள் தாக்குதலில் இருந்து உயிர்தப்பிய நீர்யானைக் குட்டி 120 வயதான ஆமையிடம் ஆறுதல தேடுகிறது. சபாகி நதியில இருந்து இநதுமாகடலுக்கு அடிததுச் செல்லப்பட்ட இந்த நீர்யானைக் குட்டி சுனாமி அசுர அலைகளால் கடலோரம கொணடு வந்து தள்ளப்பட்டது. இதை வனத்துறையினர் காப்பாற்றி மொம்பாசா துறைமுக நகரில் உள்ள விலங்கியல் பூங்காவில் ஒப்படைத்தனர்.

ஒருவயது கூட ஆகாத 300 கிலோ எடையுள்ள இந்த நீர்யானைக் குட்டிககு ஓவன் எனப் பெயரிடப்படடுள்ளது. பெற்றவர்களை இழந்த இந்த நீர்யானைக் குட்டி அங்குள்ள 120 வயது ஆமையை வளர்ப்புத் தாயாக சுவீகாித்துக்கொணடது. இதற்குத் தாயாக இருப்பதில் அந்த ஆமைக்கோ அளவிட முடியாத மகிழ்ச்சி. இரண்டும் இணைபிாிவதே இல்லை. நீந்துவது, சாப்பிடுவது உறங்குவது எல்லாம் ஒன்றாகத்தான். (து)

# ரயில் மோதலால் விஷவாயு கசிவு



அமெரிக்காவில் குளோரின் வாயுவை ஏற்றிவந்த ரயில் நின்றுகொணடிருந்த மற்றொரு ரயில் மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில் வாயுக் கசிவு ஏற்பட்டதில் 4பேர் இறநதனா. 200க்கும மேற்பட்டோர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 8பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இநதச் சமபவம் கிராணைட் விலலியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. குளோரின் தொடர்ந்து கசிந்துகொண்டே இருந்ததால் ஒரு கிலோமீற்றர் சுற்றளவில் இருந்த 5 ஆயிரத்து 400 பேரையும அதிகாரிகள் அப்புறப்படுத்தினர்.

வாயு பரவியதைத் தொடர்ந்து வீட்டிலேயே ஒருவர் இறந்து கிடந்ததும் வாகனத்தில் இருந்தவாறே ஒருவர் இறந்து இருந்ததும் தெரியவந்தது.

மேலும ரயில் பொறியியலாளா் ஒருவரும இறநதுவிடடார். ஏராளமானோா மூச்சுக்கோளாறுகளுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 45பேர் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். (து)

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று - குறள்

வலம்புரி

# ஐ.நா. செயலாளரும் தமிழ்மக்களை ஏமாற்றிவிட்டார்

சுனாமி ஏற்படுத்திய பேரழிவைப் பார்வையிடுவதற்காக ஐ.நா. செயலாளர் கொபிஅனான் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

தென்கிழக்காசியாவிலேயே பேரழிவைத்தந்த சுனாமி அனர்த்தத்தை நேரில் பார்வையிடுவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கைக்கு வருகை தந்தமையானது ஓர் சம்பிரதாயமான நிகழ்வாகும்.

இதன்மூலம் இலங்கைக்கு கிடைக்க இருக்கின்ற நிவாரணக் கொடுப்பனவுகள் எத்தகையதென்ற ஆய்வுகள் ஒருபுறமிருக்க, ஐ.நா. செயலாளர் அனான் நேரில்வந்து அழிவுகளைப் பார்வையிட்டார் என்பதன் ஊடாக சுனாமியின் தாக்கத்தை உலகநாடுகள் எந்தளவு தூரம் முக்கியப்படுத்தியுள்ளன என்ற செய்தி புலப்படுகின்றது.

இவ்வாறு ஆற்றுகை நிலையில் ஐ.நா. செயலாளரின் வரவை எதிர்பார்த்திருந்த ஈழத்தமிழ் மக்களை அவர் ஏமாற்றிவிட்டார் என்பது பெரும் கவலையைத் தந்துள்ளது.

சுனாமி அனர்த்தம் தென்னிலங்கையில் மட்டும் அழிவை ஏற்படுத்தவில்லை. மாறாக வடக்குக் கிழக்கிலும் அதனுடைய கோரத்தாண்டவம் பேரழிவை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சுனாமி ஏற்படுத்திய பேரழிவால் ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அதுமட்டுமன்றி கரையோரப் பகுதி மக்களின் அனைத்துச் சொத்துக்களுமே நாசமாகிப்போனது.

இப்பெரும் துயரிலிருந்து மீளமுடியாமல் தவிக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் தம்மை நேரில் பார்வையிடுவதற்காக ஐ.நா. செயலர் கொபிஅனான் வருவார் என ஆவலோடு எதிர்பார்த்திருந்தபோதிலும், அந்த எதிர்பார்ப்பை புரிந்துகொள்ளமுடியாதளவிற்கு ஐ.நா. செயலாளர் நடந்துகொண்டார்.

ஐ.நா. செயலாளர் வடக்குக் கிழக்கிற்கு விஜயம்செய்வதால் இழந்துபோன உயிர்களோ, அழிந்துபோன சொத்துக்களோ மீளுயிர்ப்புப்பெறப் போவதில்லை. இந்த உண்மையை உணராமலல்ல.

ஆனால், இலங்கைக்கு விஜயம்செய்த கொபி அனான் வடக்குக் கிழக்கு மக்களின் அவலநிலையைப் பார்க்காமல்போனாரே - அவர் வடக்குக் கிழக்கிற்கு விஜயம்செய்வதை இலங்கை அரசு தடுத்துவிட்டதே - அரசின் கபடத்தனத்திற்கு உலகின் உன்னத அமைப்பான ஐ.நாவின் செயலாளர்கூட அகப்பட்டுவிட்டாரே என்ற துயரே தமிழ்மக்களிடம் உள்ளது.

இலங்கை அரசு கட்டவிழ்த்துவிட்ட இருபது வருடகால யுத்தத்திலிருந்து மீள்வதற்கு முன்னநாக மரத்தால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதையாக சுனாமியும் தாக்கிவிட்டது.

அடிக்குமேல் அடிபட்டு துடித்துக்கொண்டிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களை நேரில் பார்வையிட்டு ஆற்றுப்படுத்தமுடியாத ஐ.நா. செயலாளர் தனது பதவிக்குரிய பொறுப்பிலிருந்து விலகிவிட்டார் என்றே கூறவேண்டும்.

சுனாமியின் அழிவோடு இலங்கைக்குள் நுழைந்துள்ள அமெரிக்கப் படைகள் தமிழர் தாயகப் பகுதியான வடக்குக் கிழக்கிற்கு விஜயம்செய்வதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் இவ்வேளையில், ஐ.நா. செயலாளர் கொபிஅனான் வடக்குக் கிழக்கிற்கு விஜயம் செய்திருந்தால் அது ஓர் திருப்புமுனையாக இருந்திருக்கும்.

என்னசெய்வது அவரும் ஏமாற்றிவிட்டார் என்பது மட்டுமே இப்போதைக்கு மிச்சமானதாகும்.

# புலிகளின் நிர்வாகத் திறமையினை விபரித்து மற்றுமொரு அமெ.பத்திரிகை செய்தி வெளியீடு

(கொழும்பு)

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரணப்பணிகளை மேற்கொண்டு வரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத் திறமையினை மிகவும் விபரமாக விபரித்தும் விடுதலைப் புலிகளின் பிரதேசம் ஒரு தனிநாடு போன்றே காட்சியளிப்பதாகவும் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'சிக்காக்கோ றைபியூன்' எனும் மிகவும் பிரபல்யமான பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அப் பத்திரிகையின் சர்வதேச நிருபரான கிம் பாக்கர் என்பவர் இப் பத்திரிகைக்கு இக் கட்டுரையினை கிளிநொச்சியில் இருந்து எழுதியுள்ளார்.

இதேபோன்று, விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பினை வியந்தும் பாராட்டியும் ஓர் செய்தியினை கடந்த சில தினங்களுக்கு முன்னர் வோஷிங்க்ரன் ரைம்ஸ் பத்திரிகையில் ஏ.பி. ஊடக நிருபர் ஆதர் மக்ஸ் என்பவர் எழுதியிருந்ததும், இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து வெளிவரும் டெய்லி மிரர் எனும் ஆங்கில பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியிருந்ததும் இங்கு குறிப்பிடததக்கது.

'சிக்காக்கோ றைபியூன்' செய்தியில் அவர் தெரிவித்த விபரங்கள் வருமாறு,

விடுதலைப் புலிகளின் ஒழுக்கமும், கட்டுப்பாடும், வீரமும் உலகம் அறிந்த உண்மை. இதனால் கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைபெற்ற ஈழப்போரில் இருந்து கிடைக்கப்பெற்ற பல அனுபவங்கள், இன்று கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையின் கொடூரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழீழ பிரதேசங்களில் விடுதலைப் புலிகளால் தற்போது மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளில் பிரதிபலிப்பதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

இந் நிவாரணப் பணிகள் விடுதலைப் புலிகளால் நன்கு திட்டமிடப்பட்டும் மிகவும் சிறந்த முறையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது. அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்ட பிறநாட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், போதுமான அளவு நிவாரணப் பொருட்கள் இல்லாது இருப்பினும் விடுதலைப் புலிகள் தங்களிடம் உள்ளவற்றினை நியாயமான முறையில பகிர்ந்தளிக்கும் விதத்தினையும் அவர்களது நிர்வாகத் திறமைகளையும் வியந்தும் பாராட்டியும் உள்ளனர் என்கின்றனர்.

அரசியல் காரணங்களினால் ஆழிப்பேரலையின் அனர்த்தம் ஏற்பட்டதில் இருந்து இரண்டு நாட்களுக்கு இலங்கை அரசாங்கம் எந்தவித நிவாரண நடவடிக்கைகளையும் தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ள முயற்சிக்கவில்லை. தங்களால் எந்தவொரு உதவிகளையும் விரைவாக தமிழர் பிரதேசங்களுக்கு வழங்க முடியவில்லை என்பதனை அரசின் நிவாரணப் பணிகளுக்குப் பொறுப்பானவரான நிரஞ்சன்டிசொய்சா ஒப்புக்கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான குறைகளை எதிர்வரும் காலங்களில் தவிர்க்க, தற்போது புலிகளுடனான சந்திப்புக்களை மேற்கொண்டும், அவர்களுடன் இணைந்து நிவாரணப் பணிகளை கண்காணித்தும், பொருட்களை விநியோகித்தும் வருவதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கையில் அமெரிக்க, இங்கிலாந்து மற்றும் இந்திய படையினர் நிவாரணப் பொருட்களை விநியோகித்தும், காணாமல் போனவர்களையும், இறந்தவர்களின் உடல்களையும் கண்டுபிடிக்கும் முயற்சியிலும், சேதமடைந்த பாலங்களை மீளக்கட்டுவதிலும், வீதிகளை சீரமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், இப்படியான எந்தவொரு நிவாரணப் பணிகளையும் தமிழர் பிரதேசங்களில் காண முடியவில்லை.

ஆழிப்பேரலை தமிழீழத்தை தாக்கிய சில நிமிடங்களிலேயே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரையும், விடுதலைப் புலிகளையும் கடற்கரையோரங்களிலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

சில மணிநேரத்திலேயே விடுதலைப் புலிகள் பல அகதிமுகாம்களை ஏற்படுத்தியது மட்டுமன்றி, தற்போது அவர்கள் பாதிக்கப்பட்ட பல வீதிகளை சீரமைதததும், நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள்ளும் வைத்திருக்கின்றனர்.

மிகவும் குறுகிய நேரத்திலேயே தற்காலிக மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு தேவையான மருத்துவ வசதிகளும் விநியோகிக்கப்பட்டன. காயமடைந்தவர்களின் நிலைமைக்கு ஏற்ப தரம்பிரித்து, உடனுக்குடன் அவர்களுக்கு சிகிச்சை அளித்தது மட்டுமன்றி, அவர்களை வைத்தியசாலைகளுக்கும் அனுப்பி வைத்தனர். ஒரே கிராமத்தில் இருந்து தப்பியவர்கள் அனைவரையும் ஒரே அகதிமுகாம்களில் தங்குவதற்கான ஒழுங்குகளையும் செய்து கொடுத்திருந்தனர் என செய்தி வெளியிட்டுள்ளது. (ற-4)

# திருமலையில் 51 முகாம்களில் 27,726 பேர் தங்க வைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட கடற்புவி நடுக்க ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 26 ஆகவும் காணாமல்போனவர்களின் எண்ணிக்கை 337ஆகவும் அதிகரித்துள்ளது.

உயிரிழந்த ஆயிரத்து 26 பேரில் 51 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படாமல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவ் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 27ஆயிரத்து 726 ஆகும். 1,19658பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலகத்திலிருந்து வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த முகாம்கள் பல மூடப்பட்டு தற்போது 51 முகாம்களில் இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதன்படி கிண்ணியாவல் 12 முகாம்களில் 2,924 குடும்பங்களைச் சேர்ந்த 12,107 பேரும், குச்சவெளியில் 12 முகாம்களில் 2,342 குடும்பங்களைச் சேர்ந்த 9,163 பேரும், வெருகல் பிரதேசத்தில் 4 மு[illegible]களில் 1,445 குடும்பங்களைச் சேர்ந்த 6,621 பேரும், பட்ட[illegible] சூழலும் பிரதேசத்தில் 19 முகாம்களில் 5,314 குடும்பங்களைச் சேர்ந்த 20,184 பேரும், மூதூரில் 11 முகாம்க[illegible] 2,455 குடும் பங்களைச் சேர்ந்த 10,012 பேரும், ஹோமரன் கடவெல 2 முகாம்களில் 169 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேரும்,

பதவிசிறிபுரவில் ஒரு முகாமில் 216 குடும்பங்களைச் சேர்ந்த 476 பேரும், சேருவிலவில் ஒரு முகாமில 165 குடும்பங்களைச் சேர்ந்த 672 பேரும், தம்பலகாமத்தில் 2 முகாம்களில் 124 குடும்பங்களைச் சேர்ந்த 441 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான முகாம்களை இராணுவத்தினர் சென்று பொறுப்பெடுக்க முனைந்தமை காரணமாக அங்கிருந்த பெருமளவிலான மக்கள் அச்சத்தின் காரணமாக தமது உறவினர்கள், நண்பர்களது வீடுகளுக்குச் சென்று தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# தென்னிந்தியத் திருச்சபையின் ஒளிவிழா

புங்குடுதீவு தென்னிந்தியத் திருச்சபையின் ஒளிவிழா கடந்த 5ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு புங்குடுதீவு தென்னிந்தியத் திருச்சபையின் நிர்வாகப் பொறுப்பாளர் எ.ஆர்.அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபை போதகர் அருட்தந்தை டி.ஆர்.அம்பலவாணர், நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபை போதகர் அருட்தந்தை சு.ஜோன் செல்வம், தமிழீழ விடுதலைப்புலிகளின் புங்குடுதீவு பொறுப்பாளர் இசைச்செல்வன், புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் செல்வி சா.வதனா, சமூக சேவையாளர் சு.கருணாகரன், புங்குடுதீவு மாதர் சங்கச் செயலாளர் திருமதி வசந்தா சிறிஸ்காந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றனர்.

இத் திருச்சபை முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்ச்சியைத் தொடர்ந்து புங்குடுதீவு தென்னிந்தியத திருச்சபை தையல்பயிற்சி நிலையப் பெண்பிள்ளைகளுக்கும், முன்பள்ளி சிறார்களுக்கும் திருச்சபைப் பொறுப்பாளரின் மேற்பார்வையில் உள்ள புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தில் இயங்கும் முன்பள்ளிச் சிறார்களுக்கும், பரிசில்களும் சிறார்களுக்கு தேசிய சேமிப்பு வங்கிக் கணகது புத்தகத்தையும் சிறப்பு விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர். கடந்த மாதம் 27ஆம் திகதி நடைபெறவிருந்த இந்நிகழ்வு இயற்கை அனர்த்தம் காரணமாக பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

## அவசர ஒன்றுகூடல்

யாழப்பாணம், நல்லூர் பிரதேசத்திற்குட்பட்ட சகல தனியார் கல்வி நிறுவனங்களின் மற்றும் பிரத்தியேக வகுபபுக்களின் இயக்குநர்கள், ஆசிரியர்களுக்கான அவசரமான ஒன்றுகூடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கல்வ மேமபாட்டுப் பேரவையின் முக்கிய உறுப்பினர்களும் தமிழீழ கல்விககழகப் பொறுப்பாளர்களும், தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர்களும், தமிழர் ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளரும கலந்து கொள்ளவுள்ளதால் அனறையதினம் மாலை நேர வகுப்புக்கள் அனைத்தையும நிறுத்தி இயக்குநர்களும் ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறும் வருகைதரும்போது தங்களுக்கு அனுப்பப்பட்ட பட்டியலை பூரணப்படுத்திக் கொண்டு வருமாறும் தனியாா கல்வி நிறுவன ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார். - (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

சுற்றியுள்ள இயற்கை நம்மை அழுத்திவைக்க முயல்கிறது. அதைமீறி ஆன்மா தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விரும்புகிறது. இயற்கையுடனான போராட்டம் தொடர்ந்த வண்ணமே உள்ளது. சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தில் எத்தனையோ பொருட்கள் நசுககப்படும், உடைக்கப்படும் அதுதான் உங்கள் உண்மைத் துன்பம்.

சுவாமி விவேகானந்தர்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு 18 கோடி டொலர் நிதி உதவி

## உலக வங்கித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக உலகவங்கியின் தலைவர் வூல் பென்சல் தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தம் ஏற்பட்டு 24 மணி நேரத்திற்குள் நாட்டுமக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார். இன, மத, மொழி, பேதம் பாராமல் நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அனர்த்தத்திற்கு உள்ளான மக்களுக்கு உதவியதை இலங்கையில் காணக்கூடியதாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை உட்பட கடல் பேரலையினால் பாதிக்கப்பட்டு உயிர் தப்பியுள்ள 20 லட்சம் மக்களுக்கு 6 மாத காலத்திற்கு உணவுப் பொருட்களை வழங்கும் மிகப் பெரிய நடவடிக்கையை ஐ.நா. ஆரம்பித்துள்ளது.

உலக உணவுத்திட்டப் பணிப்பாளர் ஜேம்மெரிஸ் தகவல் தருகையில், இந்தத் திட்டத்தில் 18 கோடி டொலர் செலவிடப்படும் என்றும் கர்ப்பிணி தாய்மார், குழந்தைகளுக்கு, பாலூட்டும் தாய்மார், சிறுவர்கள், ஆகியோருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

உலக உணவுத்திட்ட ஊழியர்கள் அரிசி, உலர் உணவுப் பொருட்கள் போன்ற நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட சகல நாடுகளுக்கும் விநியோகிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (9)

# டென்மார்க் தூதுவர் கிழக்கிற்கு விஜயம்

(மட்டக்களப்பு)

இலங்கைக்கான டென்மார்க் தூதுவர் கடந்த வெள்ளிக்கிழமை காலை புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மூதூர் கிழக்கு மற்றும் சம்பூர் பகுதிகளுக்குச் சென்று சுனாமி அனர்த்தங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் சம்பூரில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடந்த 6 ஆம் திகதி திருகோணமலைக்கு வந்த உயர்ஸ்தானிகர் முதலில் அரசதரப்பு அதிகாரிகளையும், சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து சுனாமி அழிவுகள் குறித்தும், அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியதுடன், சேதமுற்ற பகுதிகளையும் பார்வையிட்டார்.

அன்றையதினம் மாலை தமிழீழ விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனையும் அவரது அலுவலகத்திற்குச் சென்று சந்தித்து நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார். (ற-4)

## வடக்கிற்கு...

யிலான உறவில் எதிர்காலத்தில் பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என கருதுகிறோம்.

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் மீள ஆரம்பிப்பது தொடர்பிலும் இதன் தாக்கம் உணரப்படும் என்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் கூறினார். (த-4)

## நலன்புரி...

மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் வனகுரு தாக்குதல் சம்பவம் குறித்து நிவாரணப்பணி கருமபீடத்திற்குச் சென்று செயலணியினருடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து தாக்கப்பட்ட நபரையும் நலன்புரிமுகாம் மக்களுடனும், கிராமசேவகருடனும், நிர்வாகக் குழுவினருடனும் சந்தித்துச் சம்பவம் தொடர்பாக கலந்துரையாடினார். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொளளவும், இனிமேல் இதுபோன்ற சம்பவம் நடைபெறாது எனவும் உறுதிகூறினார். (த-101,43)


ராஜா யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், சினேகா, வடிவேல் நடித்த
வசீகரா
கா.நேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் (சங்கானை)
சரத்குமார், ரோஜா நடித்த
சின்னத்துரை
கா.நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
ANACONDA-2

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது
இலங்கை மண் நாவலடியின் மைந்தன் ஜெய்ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடிக்க


காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)


# உயிரிழப்பு ஏற்பட்ட வடமராட்சி குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம்

## தேசிய எழுச்சிப் பேரவை வழங்குகிறது

(துன்னாலை)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிரிழப்பு ஏற்பட்ட குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா வீதம் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் வழங்கிவருகின்றனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று வடமராட்சி சிதம்பராக்கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அங்கு தங்கியிருந்த எட்டுக் குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சிறில், பொருளாளர் சு.சிவராசா, ஊடகப் பேச்சாளர் பா.கனகலிங்கம், வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் துரை சத்தியசீலன், பொருளாளர் அ.ம.செபஸ்ரியான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடமராட்சியில் கடலனர்த்தத்தினால் உயிரிழப்பு ஏற்பட்ட 110 குடும்பங்களுக்கு இந்நிதி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த நவம்பர் 19ம் திகதி ஆதிகோயிலடியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான சுரேஸ்குமார் என்பவரின் தந்தையும் கடல் அனர்த்தத்தினால் உயிரிழந்ததால் அவரது குடும்பத்தினருக்கு விசேடமாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.(ச-101,52)

# கொபிஅனானின் வரவை வேண்டி நேற்று 'கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மக்களை பார்வையிட ஐக்கியநாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கொபிஅனான் வடபகுதிக்கு விஜயம்செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்று மு.ப. 11 மணிக்கு யாழ். கோயில்வீதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை வைத்திருந்தனர். அவற்றில் 'எங்கள் இழப்புக்களையும் வந்து பாருங்கள், ஐ.நா என்பது உலகப்பொது மன்றம் அதற்கேன் பிரிவினை தமிழர் சிங்களவர் என்று, அனர்த்தத்திலும் அரசின் விசமத்தனம், ஆதரவு அளிக்கிறதா ஐ.நா சபையும், சுனாமி பேய்க்கு நிவாரணம் வழங்கவந்து இனவாதப் பேயால் விழுங்குண்டார் கொபிஅனான், அரசியல் நோக்கில் வரவில்லை என்றீர்கள் வடக்கிற்கும் வராததும் அரசியலே, உலகமனச் சாட்சியின் குறியீடு ஐ.நா தமிழர் மனம் அறிய வரவேணும் ஐ.நா, சிறிலங்கா அரசே மனிதநேயத்தின் அதி உச்சப்பிரதிநிதி கொபி அனானை தடுப்பதுதான் உன் மனித நேயமா போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

இப்போராட்டத்தின் இறுதியில யு.என்.எச்சி.ஆரின் யாழ்.மாவட்ட வதிவிடப் பிரதிநிதி அக்ரோன் டிராக்ஜிடம் யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் சி.வி.கே. சிவஞானமும், தமிழர் ஆசிரியர் சங்கத்தின் இணைச்செயலாளர் பஞ்சலிங்கமும் வெவ்வேறு மகஜர்களை கையளித்தனர். (த-19)

## ஆளுநர்...

அழிவடைந்த பகுதிகளைப் பார்வையிடவுள்ளதோடு, பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களையும் டிரோன் பெர்னாண்டோ சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறியவுள்ளார். (ற)

## பாடசாலைகள்...

வாரமளவில் ஆரம்பமாகவுள்ளதுடன், யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகள் அனைத்தும் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பாடசாலைகளை வேறொரு தினத்தில் ஆரம்பிக்குமாறு கல்வியமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எனினும் திட்டமிட்டபடி பாடசாலைகள் ஆரம்பமாகுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ற)

## சமாதான முயற்சிகளுக்கு...

எனது இலங்கை விஜயத்தின் போது நேரம் வரையறுக்கப்பட்டிருந்ததனால் தமிழர் தாயகப் பிரதேசங்களுக்குச் செல்லமுடியாமல்போனது.

இலங்கை விஜயம் 48 மணி நேரமாக வரையறுக்கப்பட்டிருந்தது. இதனால் தமிழர் தாயகத்திற்கான விஜயத்தை மேற்கொள்ள முடியாமல்போய்விட்டது.

நான் தமிழீழ பிரதேசத்திற்குச் செல்லாததனால் இலங்கையின் சமாதான முயற்சியில் எவ்வித பாதிப்பும் ஏற்படாதென நம்புகின்றேன். இலங்கையில் சமாதானம் ஏற்படும்போது நான் அந்நேரத்தில் இலங்கைக்கு வருகைதருவேன்.

இலங்கையில் ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட இழப்புகளுக்கு உலகநாடுகள் பெருமளவு நிதியுதவியினை வழங்கியுள்ளன. அதனை அரசாங்கம் உரியவகையில் அனைவரையும் சென்றடையக்கூடிய வகையில் பகிர்ந்தளிக்கும் என நான் நம்புகிறேன். நிதி பகிர்ந்தளிக்கும் விடயத்தை ஐக்கிய நாடுகள் சபை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கும்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து ஆதரவு வழங்கும். இதனைக் கருத்திற்கொண்டு இருதரப்பினரும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்ல வேண்டும்.

நான் யாரையும் பிரித்துப் பார்க்கவிலலை. வரையறுக்கப்பட்ட நேரம் காரணமாகவே பெரும்பாலான பகுதிக்கு தான் செல்லமுடியவில்லை என கொபிஅனான் மீண்டும் மீண்டும் தெரிவித்தார்.

இதேவேளை ஐ.நா. செயலாளர் கொபிஅனான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரையும் நேற்றுக்காலை சந்தித்துப் பேசினார்.

அவசர உதவிகளுக்கான கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார். பின்னர் நண்பகல் 12.15 மணியளவில் தனது இலங்கை விஜயத்தினை முடித்துக்கொண்டு அனான் புறப்பட்டுச் சென்றார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான முல்லைத்தீவிற்கும் மற்றும் வடக்கின் ஏனைய பிரதேசங்களுக்கும் விஜயம்செய்யவிருந்த அனான், அங்கு விஜயம் செய்யாமல் நாடு திரும்பியமையானது தமிழ்மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. (ச-4)

# இலங்கையரை நாடு கடத்துவதை அமெரிக்கா இடை நிறுத்தியுள்ளது

அமெரிக்க அரசாங்கம் இலங்கையர்களை நாடு கடத்தும் தனது செயற்பாட்டை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்கள் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 7 ஆம் திகதிவரை அமெரிக்காவில் தங்கியிருக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இலங்கை மோசமாகப பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையினை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதாகவும், குற்றச்செயல்களோடு சம்பந்தப்படாதவர்கள் தொடர்ந்தும் அமெரிக்காவில் தங்கியிருக்க முடியும் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது. (ற-4)

# உளவளத்துறை தொண்டர்களுக்கு

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் தீங்கியுள்ள மக்களுக்கு ஆற்றுகை தொண்டாற்றும் உளவளத்துறை சார்ந்த குழுக்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லியடி வதிரியிலுள்ள சுனாமி அனர்த்த கூட்டுச் செயலணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்துப் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் குழு கேட்டுள்ளது. (ச)

# கடல் அனர்த்தத்தின் எதிரொலி மனமுடைந்த நபர் தற்கொலை

(மருதங்கேணி)

கடல் அனர்த்தத்தினால் அழிவடைந்த கற்கோவளத்திலுள்ள தனது வீட்டைப்பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் வீட்டில் சடலமாக மீட்கப்பட்டார். கற்கோவளத்தை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி யோகேஸ்வரராஜா (வயது 39) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் தனது வீட்டைப் பார்த்துவருவதற்குச்சென்ற பிரஸ்தாப குடும்பஸ்தர் மனமுடைந்த நிலையில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

இவரது சடலம் நேற்று மாலை கண்டெடுக்கப்பட்டு மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (த-35)


# மரண அறிவித்தல்



## செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் (J.P)

(SAN கடலுணவு உரிமையாளர் நாவாந்துறை)

குருநகரைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்டவருமான செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் (SAN) (09.01.2005) நேற்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான பரியாரி செபஸ்ரியாம்பிள்ளை, செபஸ்ரியம்பிள்ளை காணிக்கைமேரி ஆகியோரின் அன்பு மகனும், சந்தாளின் (ஞானம்) அன்புக்கணவரும், அன்ரசன் (சுபன்), நிருஸ்ரெலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், செ.மரியதாசன் (ஓய்வுபெற்ற வாடிவீடு), காலஞ்சென்ற அ.எட்வீனம்மா, செ.எட்வேட் (முன்னாள் பா.உ.) ம.பிரான்சிஸ்கம்மா, செ.அரியற், செ.யோண் மேரி (SKME) செ.சூசைதாசன் (வாடிவீடு திருகோணமலை) செ.அமலதாசன் (SKME) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்

இவரது நல்லடக்கம் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்.
(நாவாந்துறை)

(9169)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.